ஈஸ்ரர் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 05 | திகதி : 04.04.2021 | விலை : 50.00

## இயேசு இறைதந்தை மீது கொண்ட கீழ்ப்படிதலை உணர்த்துவதே உயிர்ப்பு விழா

### ஈஸ்ரர் செய்தியில் யாழ் ஆயர்



முதற்கண் உங்கள் எல்லோருக்கும் எனது ஈஸ்டர் நல்வாழ்த்துக்களைக் கூறிக் கொண்டு, உயிர்த்த இயேசு இப்பெரும் தொற்றுக்காலத்தில் உங்களுடன் இருந்து உங்களைப் பாதுகாத்து வழி நடத்துவாராக.

இயேசுவின் உயிர்ப்பு என்பது சென்ம பாவத்தின் மீதான வெற்றியை நமக்கு உணர்த்தி நிற்கின்றது. சென்ம பாவம் என்பது மனிதர்கள் கடவுளுக்குக் கீழ்படியாமையையும் சாத்தானுக்கு கீழ்ப்படிந்தமையையும் சுட்டிக்காட்டுகின்றது. இது இறைத் திட்டத்தை சிதைத்து, சாத்தானுக்கு உலகின் மீது ஒரு குறிப்பிட்ட சக்தியை கொடுத்தது.

சாத்தானின் எல்லாவித சோதனைகளின் மத்தியிலும் இறைத் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றியதன் வழியாக இயேசு தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக, கீழ்ப்படியாமையால் ஏற்பட்ட சென்ம பாவத்தை இல்லாதொழித்தார். காட்டிக்கொடுப்பு, அப்போஸ்தலர்கள் கை விட்டுப் பிரிதல், பொய்க் குற்றச்சாட்டுகள், கண்டனாங்கள், அவமானங்கள், கற்றூணில் கசையடிகள், முள்முடி என்பன இயேசு தந்தையின் திட்டத்துக்கு மறுப்புத் தெரிவிக்க வைப்பதற்கான சாத்தானின் முயற்சிகளே! 02

## திருத்தந்தையின் ஈஸ்ரர் செய்தி



திருச்சிலுவையில் இருந்து நமக்கு தினசரி வாழ்வில் மன்னிப்பையும், புதிய வாழ்வுக்குரிய வாய்ப்பையும் வழங்கி வரும் இயேசுவை எம் வாழ்வால் மகிமைப்படுத்துவோம். ஆயுதங்களற்ற அன்பால் நம்மை ஆளும் இறைவன் நம்மைத் தமது சிலுவையின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் வியப்பிலாழ்த்துகிறார். தம் உயிர்ப்பினால் நம் இதயங்களையும், மனங்களையும் வியப்பால் நிரப்புகிறார். வியப்பால் நிரப்பப்பட்டவர்களாக நாம், சிலுவையில் அறையப்பட்டிருக்கும் இயேசுவை உற்று நோக்கி, "நீர் உண்மையாகவே இறைமகன், நீர் எம் இறைவன்" என நாமும் மகிழ்ந்து கூறுவோம். உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக வாழ்வோம்.




"ஈஸ்டர் தாக்குதல்"
எங்கிருந்தோ வந்த பெயர்
எதேச்சையாக உச்சரிக்கப்பட்டு
காற்றில் விரவி மறைந்த ஓலமதை
சூலுற்று நிற்கிறது

இரு சொற்களும்
ஒன்றையொன்று மறுதலிக்கின்றன
ஒத்த காந்த முனைகள் போல

ஊனமான பெயர்தான்
ஆனால்
அந்நியப்படும் தூரம் இங்கில்லை

தாக்குதலுக்கு உட்பட்டால்தான்
அது ஈஸ்டர்
கோதுமைமணி மண்ணில் வீழ்ந்து மடிவதால்தான்
ஜனித்துக்கொள்கிறது

ஓநாய் வேடம் களையப்படுதலும்
பெருங்கனிவின் அலைகளை
உன்னைச் சுற்றி உணர்வதும்
ஒரு தாக்குதலே

பழைய
கறைச்சுயத்தை அழித்து
உறவின் விரிசல்களைச் சரிசெய்துகொள்ளலும்
இரத்தம் சிந்துதலே

பழகிப்போன சுழல்வட்டங்களிலிருந்து
புதிதாய் ஒளிநோக்கித் திரும்புதல்
குண்டுச் சிதறல்களே

ஊனமான பெயர்தான்
ஆனால்
அந்நியப்படும் தூரம்
இங்கில்லை

– அருட்பணி. சி.அ. அருட்செல்வன்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது எண்ணம்

## வல்லாதிக்க நாடுகளுக்கு "நீதி" பற்றி ஈஸ்டர் சொல்லும் செய்தி

நீதியென்பது நலன்சார் அடிப்படையில் அமையாது உண்மையின் பக்கம் நிற்கக்கூடிய நேர்மையான தீர்ப்பு ஒன்றைக் குறிக்கும். அதுவே பாதிக்கப்பட்டவருக்கான அல்லது பாதிக்கப்பட்ட சமூகத்துக்கான பரிகாரமாகவும் இருக்கும். எம் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்ட வேண்டும் என்பதே தவக்காலமும் பாஸ்கா மறை நிகழ்வுகளும் விடுக்கும் செய்தியாகும்.

"நீங்கள் அழவேண்டாம், மாறாக உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" (லூக்.23:28) என்றார் இயேசு. நாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் என்ன என்பதே இங்கு கேள்வி. இது தனி மனிதனுக்கும் பொருந்தும் மக்களை ஆழுகின்ற அரசனுக்கும் பொருந்தும்.

இங்கே ஈழத்தமிழர்கள் அழுதுகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்த பாவங்களுக்காக அல்ல. தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிகேட்டு சர்வதேசத்தை நோக்கி அழுகிறார்கள். ஜெனீவாவில் நேர்மையான தீர்ப்புக் கிடைக்கவில்லை. நலன்சார் நோக்கில் வல்லாதிக்க நாடுகள் இதுதான் நீதியென்று தாம் நினைத்ததைத் தீர்மானமாகத் தந்திருக்கிறார்கள். இது நீதிக்கான பரிகாரமல்ல. உன்னைப்போல் உன் அயலானையும் நேசி என்ற இறைவார்த்தைக்கு அமைவாக ஈழத்தமிழர்கள் இந்தியாவை எப்போதும் நேசிக்கிறார்கள்.

ஈழத்தமிழர்களின்எழுபதுஆண்டுகாலஅரசியல்விடுதலைப்போராட்டத்தில் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தபோதுதான் இந்தியாவின் தலையீடும் வந்தது. 1983 ஆம் ஆண்டு அந்தத் தலையீடு வந்தபோது தமிழர்கள் அனைவருமே நம்பினர். இந்தியா எங்களுக்கு ஏதோ செய்யப் போகின்றது என்று அவர்கள் தங்கள், தங்கள் பிரதேசப் பேச்சு வழக்கிலேயே தமக்குள் பேசிக்கொண்டு நம்பிக்கையை ஒருவருக்கொருவர் பகிர்ந்தும் கொண்டனர். இன்றும் அப்படியொரு அபார நம்பிக்கை இந்தியா மீது ஈழத்தமிழர்கள் பலருக்கு உண்டு.

ஆனால் இந்தியாவுக்குத் தமிழர்கள் மீது நம்பிக்கையுமில்லை. விருப்பமும் இல்லை. மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் மீது அதீத அன்பும் நம்பிக்கையும் உண்டு. ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் காலத்தில் இருந்து சிங்கள ஆட்சியாளர்கள் பலர் இந்தியாவுக்கு இழைத்த துரோகங்கள் அதிகம். இந்தியாவையும் இந்திய அரசியல்வாதிகளையும் மற்றும் தமிழக அரசியல்வாதிகளையும் சிங்கள நாளேடுகள், சிங்கள இலத்திரனியல் ஊடகங்கள் கடுமையாக விமர்சித்தும் இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் தாண்டி இந்திய மத்திய அரசு இலங்கை மீதான விசுவாசத்தை வெளிப்படுத்தியே வருகின்றது.

இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு இலங்கை ஒரு செல்லப்பிள்ளைதான். இலங்கை இந்த வல்லாதிக்க நாடுகளை நோக்கி எத்தனை அவமானங்களைச் செய்தாலும் அல்லது கையொப்பமிட்ட சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களில் இருந்து தன்னிச்சையாக விலகினாலும் அல்லது செயற்படுத்த மறுத்தாலும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் அதற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைகளையுமே எடுத்ததில்லை. அமெரிக்கா இலங்கையை எச்சரித்தது. இந்தியா வெருட்டியது என்றெல்லாம் தமிழ் அச்சு ஊடகங்களில் மாத்திரமே தலைப்புச் செய்திகள் வரும்.

ஈழத்தமிழர்கள் இந்தியாவை மதிக்கின்றனர். அமெரிக்காவும் ஏதோ செய்யுமென எதிர்ப்பார்க்கின்றனர். ஆனால் சிங்கள பௌத்த அமைப்புகளும் சிங்கள அரசியல்வாதிகளும் அமெரிக்காவையும் இந்தியாவையும் விமர்சிக்கின்றனர். இருப்பினும் இலங்கை கேட்கும் உதவிகளைக், கடன்களை விழுந்தடித்துக் கொடுக்கின்றன.

ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்கள் சார்ந்து இந்த நாடுகள் செய்வதெல்லாம் நேர்மையற்ற செயற்பாடு மாத்திரமே. இலங்கை அரசாங்கத்தை அதாவது சிங்கள ஆட்சியாளர்களையும் சிங்கள மக்களையும் கோபபப்படுத்தாமல் உங்கள் கோரிக்கைகளை ஜெனீவா மனித உரிமைச் சபையில் முன்வையுங்கள் என்று தமிழ்த்தேசியக் கட்சிகள், தமிழ் சிவில்சமூக அமைப்புகள் போன்றவற்றுக்கு ஆலோசனை கூறியதும் இந்த நாடுகள்தான். ஆனால் மறுபுறத்தே ஈழத்தமிழர்களின் எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டத்தை இன்று வரை பயங்கரவாதமாகவே இந்த நாடுகள் சித்தரிக்கின்றன.

தீர்மானம் வெளிவந்த பின்னர் குற்றச்செயல்களுக்குக் காரணமானவர்கள் எனத் தெரிவிக்கப்படுபவர்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிகிடைக்கவேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் இந்தக் கோரிக்கைகள் வெறுமனே ஈழத்தமிழர்களைச் சமாதானப்படுத்த வெளியிடப்பட்டவை என்ற முடிவுக்கே வரவேண்டும். ஏனெனில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இவ்வாறு கோரிக்கை விடுவது வெறுமனே செய்தி மாத்திரமே. தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இந்தக் கோரிக்கையை மனித உரிமைக் காப்பகம் வெளியிட்டிருக்க வேண்டும்.

நேர்மையான முறையில் பாதிக்கப்பட்ட இனம் ஒன்று கோருகின்ற சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற சிந்தனை இந்த வல்லாதிக்க நாடுகளுக்கும் அதனோடு இணைந்து செயற்படுகின்ற சர்வதேசப் பொது அமைப்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

சரி இனியென்ன மேலும் கால அவகாசம் வழங்கப்படுமா? சர்வதேச நீதியென்றால் என்ன? ஜெனீவா மனித உரிமைச் சபையின் பொறுப்புதான் என்ன? காலம் தான் பதில் கூறவேண்டும்.

உங்களுக்காகவும் உங்கள் சொந்த நலனுக்காகவும் மற்றையவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நீதியை அடகுவைக்காதீர்கள் என்பதுதான் உயிர்த்த இயேசு சொல்லுகின்ற செய்தி.

## தொலைக்காட்சி நேரலையில் புனிதவார வழிபாடுகள்

சமகால சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலேயே இறைமக்கள் வழிபாடுகளில் பங்கு பற்ற முடியும் என்பதால் ஏனையவர்கள் இல்லத்தில் இருந்தே பங்குபற்றக்கூடிய வகையில் யாழ் ஆயர் தலைமையில் யாழ் பேராலயத்தில் நடைபெறும் புனிதவார வழிபாடுகளை நேரலையாக ஒளிபரப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. புனிதவார வழிபாடுகளை நேரலையாக "யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இணையம்" ஊடாகவும், "இறை ஒளி", "Holy Mary" தொலைக்காட்சி ஊடாகவும் பார்க்க முடியும். ஆயர் அவர்கள் பேராலயத்தில் நடாத்தும் வழிபாடுகளின் நேர ஒழுங்காவது:

| | |
|---|---|
| புனித வியாழன் திருப்பலி | மாலை 5.30 மணி |
| புனித வெள்ளி ஆராதனை | மாலை 5.30 மணி |
| புனித சனி திருவிழிப்பு வழிபாடு | இரவு 10.30 மணி |

## புனித வாரத்தில், 1,200 ஏழைகளுக்கு தடுப்பூசிகள்

கொவிட்-19 பெருந்தொற்றுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுவதில் ஒருவரும் ஒதுக்கப்பட்டுவிடக்கூடாது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விடுத்துவரும் எண்ணற்ற விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, சமுதாயத்தில் மிகவும் நலிந்த மக்களுக்கு, புனித வாரத்தில், தடுப்பூசிகள் வழங்கவிருப்பதாக, திருத்தந்தையின் தர்மப்பணி அலுவலகம் அறிவித்துள்ளது.

வத்திக்கானின் கோவிட்-19 குழு வழியாக, Lazzaro Spallanzani மருத்துவமனையால் வழங்கப்பட்டு, திருப்பீடத்தால் வாங்கப்பட்ட தடுப்பூசிகள், சமுதாயத்தில் மிக வறியோர் மற்றும், மிகவும் ஒதுக்கப்பட்டவர்கள் என1.200 பேருக்கு வருகிற உயிர்ப்பு ஞாயிறுக்குள் வழங்கப்படும் என்று அந்த அலுவலகம் அறிவித்துள்ளது.

இத்தகைய ஏழை மக்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும், தடுப்பூசிகள் வழங்கப்படுவதற்கு நிதியுதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள இந்த அலுவலகம், அந்த உதவிகளை, திருத்தந்தையின் பிறரன்பு வங்கிக்கணக்குக்கு இணையம் வழியாகச் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

வத்திக்கானில் கடந்த சனவரியில் தடுப்பூசிகள் வழங்கும் பணி தொடங்கப்பட்டபோது, திருத்தந்தையின் வேண்டுகோளின்பேரில், முதலில், வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தைச் சுற்றி வாழ்கின்ற ஏறத்தாழ ஐம்பது வீடற்றோர்க்கு வழங்கப்பட்டது.

## தமிழக சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற கூட்டணியை ஆதரிப்போம்

### தமிழக ஆயர் பேரவையின் தேர்தல் நிலைப்பாடு

வருகிற ஏப்ரல் 6ம் திகதி தமிழகத்தில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் குறித்த ஆயர்களின் நிலைப்பாடு குறித்த மேய்ப்புப்பணி அறிக்கை ஒன்றை, தமிழக ஆயர் பேரவையின் தலைவர், மதுரைப் பேராயர் அந்தோனி பாப்புசாமி அவர்கள் வெளியிட்டுள்ளார்.

தமிழகம் சந்திக்கவிருக்கின்ற தேர்தல், தமிழுக்கும், தமிழகத்திற்கும், இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்திற்கும், அரசியல் சாசனம் வகுக்கும் ஜனநாயகம், சமத்துவம், சமயச்சார்பின்மை என்னும் மதிப்பீடுகளுக்கும் மிகப் பெரிய சவால்களைச் சந்திக்கும் ஒன்று எனக் கூறும் ஆயரின் அறிக்கை, இத்தேர்தலில், மதச்சார்பற்ற கூட்டணியை ஆதரிப்போம் என்று கூறியுள்ளது.

இந்திய நடுவண் அரசின் அண்மைக்காலக் கொள்கைகள், திட்டங்கள் ஆகிய அனைத்தும் குடிமக்களை அதிகாரப்படுத்துவதாய் இல்லை என்றும், சனநாயக விதிகள் மீறப்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் கொடுங்கோல் சட்டங்களால், மானுட உரிமைகள் மோசமாக மீறப்படுகின்றன என்றும், அவ்வறிக்கை கூறியுள்ளது.

தமிழகத்தைத் தற்போது ஆளும் அரசு, நடுவண் அரசின் எந்தக் கொள்கையையும் கேள்விக்குள்ளாக்குவதில்லை, மற்றும், அதற்கு வெளிப்படையாக ஆதரவும் அளித்துவருவது, வருத்தம் தருகிறது என்றும், அவ்வறிக்கை கூறியுள்ளது.

அ.இ.அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறுவது, மதவாத சக்திகளின் வெற்றியாகவே அமையும் என நம்புகிறோம் என்றும், தமிழக மக்களைக் காத்துவரும் சமுதாய நல்லிணக்கம், தமிழரின் வேலைவாய்ப்பு, மொழிவழிப்பட்ட அடையாளமெல்லாம் சிதைந்துவிடுமோ என்றும் அஞ்சுகிறோம் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

ஜனநாயகம், சமுதாய நீதி, சமத்துவம், உடன்பிறந்த உணர்வு, சமுதாய நல்லிணக்கம், போன்ற இயேசுவின், மற்றும், இந்திய அரசியல் சாசனத்தின் மதிப்பீடுகளை உயிர்பெறச்செய்வதற்கும், தமிழ் மொழி, மரபுகள், தமிழர்தம் வளர்ச்சி மற்றும், சிறுபான்மையினர் நலன் காக்கப்படுவதற்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றியை உறுதிசெய்யும் நோக்குடன் இத்தேர்தலில் கவனத்தோடு கடமையாற்றவேண்டும் என்று அன்புடன் வேண்டுகிறோம் என, தமிழக ஆயர் பேரவையின் அறிக்கை கேட்டுக் கொண்டுள்ளது.

**இயேசு இறைதந்தை மீது ...**

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இயேசு சாத்தானைத் தோற்கடித்து, தொடர்ந்து அன்பு செய்து, மன்னித்து, கீழ்படிந்து வாழ்ந்தார். இயேசு எம்மைத் தூரத்திலிருந்து மீட்கவில்லை மாறாக பாவ உலகில் மனித அவதாரம் எடுத்து எம்மை மீட்டுக்கொண்டார். "சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்" (பிலிப்பியர் 2:8). அவர் பாவம் செய்யாத போதிலும் மனுக் குலத்தின் பாவங்களையும், அதனால் கட்டவிழ்த்து விடப்பட்ட துன்பங்களையும், வேதனைகளையும் அவரே சுமந்து கொண்டார்.

பரிசுத்த வாரத்தில் இறை மீட்பின் அன்பைத் தியானித்தவர்களாக இறைவன் எமக்குச் செய்த பெரும் நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், நாம் அவரைப் பின்பற்ற மேற்கொண்ட உறுதிப்பாடுகளைப் புதுப்பித்துக் கொள்வோம். அவரைப் பின்தொடர்வது என்பது சுயமாக எமது நாளாந்த சிலுவைகளை ஏற்று அவரின் அடிச்சுவட்டில் நடப்பதை விட வேறு இல்லை.

ஆக உயிர்ப்பு விழா என்பது இயேசு இறை தந்தை மீது கொண்ட கீழ்ப்படிதலை நினைவு கூரும் நேரம் ஆகும். நாம் கொண்டாடும் இவ்வெற்றி விழாவானது இக்கீழ்ப்படிதல் வழியாக இயேசு சாத்தானைத் தோற்கடித்தார் என்பதாகும். இதுவே உயிர்ப்பு விழா எமக்கு விடுக்கும் செய்தியாகும். நாம் அனுபவிக்கும் துன்பங்கள், நாம் பிறரால் தவறாகப் புரியப்படும் நிலைகள், நாம் நாளாந்தம் சுமக்கும் சிலுவைகள் என்பன இறை திட்டத்திற்கு நாம் கீழ்ப்படியும் நிலைகளே!

சிலுவை அடியில் நின்று எமக்காகப் பரிந்து பேசிய அன்னை மரியுடன் இணைந்து உயிர்த்த இயேசுவின் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கலசம்

# குழும வாழ்வுக்கு அடித்தளமாகும் இயேசுவின் உயிர்ப்பும் தூய ஆவியாரின் வரவும்


இயேசு தன்னுடைய பகிரங்கப் பணிக்காலத்தில் செய்து வந்த புதுமைகள், குணமளித்தல்கள், அரும் அடையாளங்களால் கவரப்பட்டிருந்த அவரது சீடர்கள் இயேசுவின் இறுதி மூச்சுவரை அவர் புதுமையாக மீண்டு வருவார் என எதிர்பார்ப்புக் கொண்டிருந்தனர். எம்மாவு செல்கின்ற வழியில் அவரது இரு சீடர்கள் "அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாக சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் .இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம்." (லூக் 24:20) என்கிறார்கள். இந்நிலையில் அவர்களது எதிர்பார்ப்பு பொய்த்துப் போகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுகிறார். அதிசயம் எதுவும் நடக்கவில்லை. அவர் கல்லறையில் புதைக்கப்பட்டும் மூன்று நாட்கள் ஆகிவிட்டது. (லூக்24:21) இந்நிலையில் மனிதரைப் பிடிப்பதற்காக என இயேசுவால் அழைக்கப்பட்டு மீன் களையும் படகுவலைகளையும் விட்டு வந்த பேதுரு மீண்டும் தோழர்களுடன் கடலுக்குச் செல்கிறார். "அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம் "நான் மீன் பிடிக்கப் போகிறேன்" என்றார். அவர்கள் "நாங்களும் உம்மோடு வருகிறோம்" என்று போய்ப் படகில் ஏறினார்கள். (லூக் 20:3) இரண்டு சீடர்கள் எம்மாவுக்குப் புறப்பட்டுப் போகிறார்கள் (லூக்: 24:13-35) சீடர்களின் இந்த நம்பிக்கையீனம், பழைய வாழ்வுக்கே திரும்பும் மனநிலை இவற்றின் பின்னணியில்தான் அவர்களுக்கு ஒரு புதிய அனுபவம் கிட்டுகிறது.

அவர்களைச் சேர்ந்த பெண்கள் சிலர் அவர்களை மலைப்புக்கு உள்ளாக்குகிறார்கள். (லூக். 24:22) இயேசு உயிர்த்துவிட்டார் என்ற செய்தியை அந்தப் பெண்கள் சீடர்களுக்கு அறிவிக்கிறார்கள். (லூக். 23:10) ஆயினும் அவர்களால் அதை நம்ப முடியவில்லை. இயேசு உயிர்த்ததை யாரும் நேடியாகக் காணவில்லை. ஆயினும் உயிர்த்த ஆண்டவரின் தரிசனத்தைப் படிப்படியாக பலரும் பெறுகிறார்கள். மகதலா மரியாவுக்கு தோன்றுகிறார். பேதுருவுக்குத் தோன்றுகிறார். எம்மாவு சென்ற இரு சீடருக்குத் தோன்றுகிறார். (லூக். 24:36)

உயிர்த்த இயேசு தமது சீடர்களுக்குத் தோன்றிய சந்தர்ப்பங்களை பதிவு செய்திருக்கும் ஆறு திருவிவிலிய பகுதிகளையும் ஆய்வுக்குட்படுத்திய மக்பிறைன் அவர்கள் பின்வரும் ஐந்து பொதுப்பண்புகளை அவதானிக்கிறார்.

1. காட்சியை பெற்றுக் கொண்டவர்கள் நடந்தவை பற்றிய விரக்தியிலும் நம்பிக்கையீனத்திலும் இருக்கிறார்கள் (லூக்24:21)
2. இயேசு தாமாகவே காட்சி தருகிறார். (யோவா 20: 19, லூக் 24:15, மத் 28:9-18)
3. இயேசு அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார். உதாரணமாக "சமாதானம் உண்டாவதாக" (யோவா. 20:19, மத் 28:9) என்று வாழ்த்துகிறார்.
4.அவர்கள் இயேசுவை அடையாளம் காணுகிறார்கள் (யோவா. 21:7,20:20, மத். 28:9,17)
5.சென்று சீடர்களை ஏற்படுத்துமாறு இயேசு அவர்களை பணிக்கிறார். (மத். 28:19, யோவா. 20:21,21:15-17, லூக். 24:46 - 49)

ஆகவே இயேசுவின் இறையாட்சி இலட்சியத்தாலும் அவரது வாழ்வாலும் கவரப்பட்டு அல்லது அவரால் நேரடியாகவே அழைக்கப்பட்டு அவரைப் பின்தொடர்ந்த சீடர் குழாம் அவரது மரணத்தின் பின்பு நம்பிக்கையிழந்து சிதறிப்போகின்றது அவர்கள் தமது பழைய வாழ்க்கை நிலைக்குத் திரும்பச் செல்ல முனைகின்றனர். ஆனால் அவர்களுக்கு மீளவும் நம்பிக்கையூட்டி ஒரு குழுமமாக அவர்களை மீள இணைத்த நிகழ்வு இயேசுவின் உயிர்ப்புக் காட்சிகளாகும். இயேசுவை உயிர்த்த ஆண்டவராகச் சீடர்கள் அனுபவித்த போது அவர்களிடம் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் மீளத்துளிர்க்கிறது. அவர்கள் திரும்ப ஒன்று சேருகிறார்கள். தாம் நம்பிய நற்செய்தியை உலகெங்கும், படைப்புக்கெல்லாம் அறிவிக்கத் தயாரான குழுமமாக இப்போது அவர்கள் மாறிவிடுகிறார்கள். இயேசு விண்ணேற்றமடைந்து சென்றபின் "அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும் அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்." (தி.ப.1:14) இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் தற்கொலை செய்திருந்ததனாலே அவனுடைய இடத்திற்கு இன்னொனுமொருவரை நியமித்து திருத்தூதரின் எண்ணிக்கையை பன்னிருவர் குழுவாகவே பேணுகிறார்கள். (தி.ப. 1:23-26).



அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன்

இவ்வாறு இயேசுவின் உயிர்ப்பு அனுபவம் அவர்களை மீளவும் ஒன்று கூட்டியிருந்தாலும் இன்னும் திருச்சபையாகப் பணியேற்கும் நிலைக்கு அவர்கள் உயரவில்லை. லூக்கா நற்செய்தியின்படி இயேசு விண்ணேற்புக்கு முன்பு அவர்களோடு உரையாடுகையில் "நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்." (லூக்.24:49) என்று கூறுகிறார். இவ்வாறு இயேசு கூறிய தூய ஆவியானவரின் வருகை பெந்தக்கோஸ்தே திருவிழாவின்போது நடக்கிறது. (தி.ப 2:1-13) அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடிவந்திருந்தபோது தூய ஆவியார் அக்கினி நாக்குகளாக அவர்கள் மேல் இறங்குவதாக உணர்ந்தார்கள். அச்சம் நீங்கி அவர்கள் திடமடைந்தார்கள். அவர்கள் பரவசமடைந்து பேசியபோது அது பெந்தக்கோஸ்தே விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் அவரவர் மொழியிலேயே விளங்குகிறது. பேதுரு துணிவோடு போதிக்கிறார். அவரது போதனையைக் கேட்டு அன்றே மூவாயிரம் பேர் அவர்களோடு இணைந்து கொள்கின்றனர். (தி.ப 2:41) இந்நிகழ்வே திருச்சபையின் பிறப்பு நிகழ்வாகக் கருதப்படுகிறது.

திருச்சபையிலே தூய ஆவியின் வருகை ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி மக்பிறைன் குறிப்பிடும்போது "தூய ஆவியின் வருகை" திருச்சபையை "இறைவனின் இல்லம்" ஆக்குகிறது. (1கொரி.3:16, 2கொரி 6:16) என்கிறார். தூய ஆவியாரே திருச்சபையை ஒன்றிணைக்கும் உயிராக இருந்து செயற்படுகிறார். வல்லமை தருகிறார், வழிநடத்துகிறார், மீட்கிறார் வளர்க்கிறார். தூய பவுல் அடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய தமது முதல் மடலிலே 12ம் அதிகாரத்திலே எவ்வாறு திருச்சபையின் ஒற்றுமைக்கும் குழுமவாழ்வுக்கும் ஆதாரமாகத் தூய ஆவியார் திகழ்கிறார் என தெளிவாக விளக்குகிறார். ஒரு உடலிலுள்ள பல உறுப்புக்கள் வெவ்வேறு பணிகளை ஆற்றிய போதும் அவை ஒரு உடலாக ஒத்திசைவது போல தூய ஆவியாரும் திருச்சபையில் பல்வேறு கொடைகளைப் பொழிந்து அவற்றினூடாக திருச்சபையை இயேசுவின் மறையுடலாக பேணி வருகிறார். "அருள் கொடைகள் பல வகையுண்டு ஆனால் தூய ஆவியார் ஒருவரே பொதுநன்மைக்காகவே தூய ஆவியாரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது." (1கொரி. 12:5-7)

ஆகவே இயேசுவின் மரணத்தைத் தொடர்ந்து நம்பிக்கையிழந்து சிதறுண்டுபோன இயேசுவின் சீடர்களை மீள ஒருங்கிணைத்து அவர்களை ஆற்றலோடு இயங்கும் திருச்சபையாக ஆக்கிய இரு அடித்தள அனுபவங்களாக இயேசுவின் உயிர்ப்பின் அனுபவமும் தூய ஆவியாரின் பொழிதல் அனுபவமும் அமைந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்விரு அனுபவங்களாலும் ஆழப்படுத்தப்பட்ட இயேசுவின் சீடர்கள் இயேசு போதித்த இலட்சியமாகிய இறையரசை இம்மண்ணில் நனவாக்கும் குழுமவாழ்வைக் கட்டியெழுப்பும் பணியில் இறங்குகிறார்கள். தொடக்கத்திருச்சபையில் அவர்கள் கட்டியெழுப்ப முயன்ற அந்த இலட்சிய கிறிஸ்தவ குழும வாழ்வு எக்காலத்துக்குமான திருச்சபையின் இலக்கு வாழ்வாக திகழ்கிறது.

அனைவருக்கும் இயேசுவின் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்கள்!

தூய ஆவியாரின் பலம் பெற்றவராய் உயரிய குழுமங்களைக் கட்டியெழுப்புவோம்!

## பிரான்சிஸ்கன் 3ம் சபை பொதுநிலையினருக்கான தவக்காலத் தியானம்

கொழும்புத்துறை ஆவே மரியா பிரான்சிஸ்கன் சபை சிற்றாலயத்தில் 20.02.2021 சனிக்கிழமை காலை10.மணியளவில் தலைவி அந்தோனிப்பிள்ளை மேரியம்மா தலைமையின் கீழ் ஆன்மீக ஆலோசகர் அருட்பணி S.J.இராஜநாயகம் அடிகளாரின் ஆசியுரையுடன் தியானம் ஆரம்பமாகியது தொடர்ந்து பிரான்சிஸ்கன் 3ம் சபை திருச்சிலுவை கன்னியர் மட அருட்சகோதரி விற்றறீன் அவர்களினால் "திரும்பிப்பார்" என்ற கருப்பொருளிலும், புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வு பற்றியும் கருத்தமர்வு இடம்பெற்றது.

தொடர்ந்து பிரான்சிஸ்கன் சபை அருட்தந்தை மத்தியூஸ் அடிகளாரினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நற்கருனை ஆசீர்வாதமும் இடம்பெற்றது இத்தியான நிகழ்வில் பிரான்சிஸ்கன் அருட் சகோதர்களும், பிரான்சிஸ்கன் 3ம் சபை பொதுநிலையினரும், பிரான்சிஸகன் சபை மாணவர்களும் இத்தியானத்தில் பங்கு பற்றி சிறப்பித்தனர்.

## பெருமையாக உயிர்ப்போம்

ஒவ்வொரு நாளும் பல நூறு எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றி மறைகின்றன. பல உணர்வுகள் எழுந்து விழுகின்றன. நேர்மறை உணர்வுகள் நேரிய வாழ்வுக்கு நல்லது எதிர்மறை உணர்வுகள் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும். இன்று அதிகமான எதிர்மறை உணர்வுகளே உலகை வீழ்த்துகின்றன. நிமிர்ந்து செல்ல வேண்டிய பூமி சரிந்து விழும் சாத்தியம். ஒவ்வொரு நாளும் பழிக்குப் பழி உணர்வுகளைக் குவித்துக்கொண்டிருக்கின்றோம்.

"அறிவிலியே, இன்றிரவு உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்து விடும்" (லூக் 12:20) என்பதையும் மறந்து, ஆளுமை முழுவதும் பழிக்குப் பழி உணர்வுகளையே நிரப்பிக் கொண்டிருக்கின்றோம். வெறுமனே செல்ல வேண்டிய இறுதிப் பயணம் தேவையில்லாத எதிர்மறை பழிக்குப்பழி - உணர்வுகளால் பயணிக்கின்றது.



இந்த நிலையில் கல்லறை எப்படி வெறுமையாகும்? இந்தப் பழிக்குப் பழி உணர்வுகளோடு கல்லறைக்குள் செல்லும் போது, மீண்டும் ஒரு மரணம் கல்லறைக்குள் ஜனனமாகிறது.

கல்லறையும் எதிர்மறை உணர்வுகளால் புழுங்கி வாடை அடிக்கிறது. வெறுமையாக இறப்போம் பெருமையாக உயிர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலன் கலசம்

மீண்டும் ஓர் உயிர்த்த ஞாயிறு. இதற்கு முன் குருத்தோலை ஞாயிறுடன் துவங்கியது. புனித வாரம் அதற்கு முன் ஒரு தவக்காலம், சாதாரண காலம், கிறிஸ்து பிறப்பு விழாவும் அதை ஒட்டிய திருநாள்களும் (புதுவருடம் உட்பட), திருவருகைக் காலம் நீண்ட சாதாரண காலம் - இது நீண்டு விட்டதாலோ என்னவோ இக்காலத்தில் வெவ்வேறு புனிதர்களுடைய திரு நாட்கள் - இவ்வாறு திருச்சபை ஒரு திருவழிபாட்டு நாட்காட்டியை உருவாக்கியுள்ளது. இதெல்லாம் நல்லவை தான். ஆனால் இக்காலங்களில் வருடந்தோறும் ஒரு சுழற்சியாக வரும் பொழுது, அந்த வட்டத்துக்குள் சிக்கி நாமும் அந்த வட்டத்துக்குள்ஓடிக் கொண்டிருக்கிறோம். இது ஒரு பழக்கத்துக்குள் அடிமைப்பட்டுவிடுகிறோம். சுழற்சிக்குள்ஒரு தேக்கம்.

இந்தப் பழக்கமும், வழக்கமும், அடிமைத்தனமும் மனித வாழ்வில் ஒரு நோக்கத்தை உருவாக்கி விடுகின்றது. இந்தக் தேக்கத்தில் மனித வளர்ச்சிக்கோ, செபவளர்ச்சிக்கோ, ஆன்மீக வளர்ச்சிக்கோ இடமின்றிப் போய் விடுகின்றது.

சொல்லும் செபத்தில் கவனமில்லை, செய்யும் வழிபாட்டில்' அர்த்தம் தெரிவதில்லை. வாய் ஏதோ சொல்லுகின்றது, மனமோ கொப்பு விட்டு கொப்பு தாவும் குரங்குகள் போல் தாவிக் கொண்டே போகின்றன. இப்படிப்பட்ட செபமும் வழிபாடும் ஒரு வகை ஆட்டிப்படைக்கும் வலுக்கட்டாயப்படுத்தும் (Obsessive C ompulsive behavior) ஒரு பழக்கமாகி எந்த வித மாற்றத்தையும் வாழ்க்கையில் கொண்டு வராது.

### இரட்டை வாதம் (இருமை வாதம்)

செபமும் வாழ்வும் மின் வண்டி ஓடும் இரண்டு தண்டவாளங்கள் போன்று ஒன்றுக் கொன்று எந்த விதத் தொடர்புமின்றி. இரண்டும் இரண்டு வெவ்வேறு திசைகளில் ஓடிக் கொண்டு போகின்றன. இதையே இரட்டை வாதம் அல்லது இருமை வாதமென்று கூறுகின்றோம். "வழிபாடு வாழ்வாகுமா" என்ற தலைப்பில் அருட்பணி ச.ஜே. சுரெந்திரன், அமதி அவர்கள் காவலனில் தொடர் கட்டுரை எழுதி வருகிறார். எனது அனுபவத்தில், எல்லை மதங்களிலும் பெரும் பான்மையான மதத்தினரின் வாழ்க்கை வழிபாடாவதுமில்லை, வழிபாடு வாழ்வாவதுமில்லை! இப்படிப்பட்ட மக்கள் (நான் உட்பட) இருளில் வாழ்கின்றோம். முரண்பாடுகளையுடைய வாழ்வை வாழுகின்றோம்.

இவ்வேளை இயேசுவின் வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன. "ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியை விட இருளையே விரும்பினர். தீங்கு செய்த அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச் செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக் கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள்." (யோவா 3:19-21)

### இது, ஒரு பயணம்

இருளில் இருந்து ஒளிக்கு வருவது தான் ஆன்மீகம்.




செப வளர்ச்சியில் வருவது தான் ஆன்மீகம். பொய்மையில் இருந்து உண்மையைத் தேடி வருவது தான் ஆன்மீகம். கேட்பதற்கு எவ்வளவு சுலபமாக உள்ளது. ஆனால் வாழ்வது தான் கடினம் இருளில் இருந்து ஒளிக்கு வருவது தான் ஆன்மீகப் பயணம். பொய்யிலிருந்து உண்மைக்கு வருவது தான் ஆன்மீகப் பயணம். இந்தப் பயணம் என்பது ஓர் உருவகம்.

ஏன் இந்தப் பயணத்தை செய்ய முடியவில்லை? பலர் முயற்சிக்கவே முயல்வதில்லை? இந்த இருளும், ஒளியும் ஒவ்வொருவருள்ளும் உண்டு இந்தப் பொய்யான வாழ்வும், உண்மையும் எனக்கும் தான் உண்டு.

ஆம், நாம் பொய் சொல்லும் பொழுது களவெடுக்கும் பொழுது, கொலை செய்யும் பொழுது, மற்றவர்களை ஏமாற்றும் பொழுது, சினங் கொண்டு மற்றவர்களைத் திட்டும் பொழுது, பதவி ஆணவம், படிப்பு ஆணவம், பண ஆணவம் கொண்டு திமிராக பேசும் பொழுதும், மற்றவர்களை மட்டந்தட்டிப் பேசும் பொழுதும், உண்மையை மறைக்கும் பொழு தும், மற்றவர்கள் நன்மை செய்யும் பொழுது அதைத் திரித்து தவறான விளக்கம் கொடுக்கும் பொழுது, ஓர் ஊகத்தில் மற்றவர்களைத் தீர்ப்பிடும் பொழுது, மற்றவர்களின் மொழி, மத, சுதந்திரத்தை அடிமையாக்கும் பொழுது, இவற்றிற்கு உடந்தையாகும் பொழுது (இந்தப் பட்டியல் ஒவ்வொருவரையும் பொறுத்து நீளும்) நான் இருளில் வாழுகின்றேன் பொய்மையில் வாழுகின்றேன்.

இவற்றையெல்லாம் செய்து கொண்டு, இருளிலும் பொய்யிலும் வாழ்ந்து கொண்டு மதத்தின் பின் மறைவது மிகக் கொடிய செயல்: தங்களைத் தாங்களே தங்கள் செயல்களை நியாயப்படுத்துவோர், நியாயப்படுத்திக் கொண்டே பொய் சொல்பவர்கள், கொலை செய்பவர்கள் இந்த உலகில் கோடிக்கணக்கானோர் உள்ளனர். இவர்களுக்கெல்லாம் உயிர்த்த ஞாயிறு திருவழிபாட்டு நாட்காட்டியில் ஒரு நாள். அவ்வளவு தான்.

**சிவசேன**

இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது நண்பர் ஒருவர் ஒரு காணொளியை சமூக வலைத்தளத்தில் எனக்கு அனுப்பியிருந்தார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த சிவசேன யாழில் தொடங்கிய பொழுது காவலன் வழி நின்று நான் எச்சரித் திருந்தேன். இப்பொழுது இந்த சிவசேன நஞ்சைக் கக்குகின்றது. இது போதா தென்று பா.ஜ.க என்ற பெயரில் புதுக் கட்சியொன்று உருவாகியுள்ளது. விழிப்பாய் இருங்கள், இருப்போம். இந்நாட்டுத் தமிமினம் கட்சி, மதம், சாதி, மாகாணம், மாவட்டம் என்று பிரிவார்களானால் (ஏற்கனவே பல பிரிவுகள் உண்டு) நாமே எம் மேல் சேற்றை அள்ளி வீசுகின்றோம். இவர்கள் எல்லாம் இருளில் வாழ்கிறார்கள். பொய்யில் வாழ்கிறார்கள். தங்கள் தீச் செயல்களை மறுப்பதற்கும் மறுப்பதற்கும் ஒளியை நாடார்கள்.

ஒரு பக்கத்தில் புறத்தே இருந்து பௌத்த சிங்கள வாதமும், மறுபக்கத்தால் உள்ளிருக்கும் சைவமத அடிப்படை வாதமும் தமிழ் இனத்தை அழிக்கின்றன. "அன்பே சிவம்" இது, ஓர் அர்த்தமுள்ள சைவக் கொள்கை இந்த "சிவன்" இல்லாத சிவசேன இருளில் இருந்து "அன்பே சிவம்" என்ற ஒளிக்கு வரவேண்டும். அதே போன்று கருணையைப் போதித்த புத்தன் இல்லாத சிங்கள அடிப்படை வாதத்தினர் புத்தரின் வழி கண்டு வாழ்ந்து ஒளிக்கு வர வேண்டும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவத்தில் சொல்லும் செபமும், வழிபாடும் இருளிலேயே தொடர்ந்து இருக்கவே துணை செய்யும்.

**அக விடுதலை**

பொய்மையில் இருந்து நாம் உண்மைக்கு வரும் பொழுது, இருளில் இருந்து நாம் உண்மைக்கு வரும் பொழுது சுழற்சியான வட்டத்தில் இருந்து, எங்கோ அந்த வட்டத்தை உடைத்துக் கொண்டு நாம் வெளிவர வேண்டியது அவசியம். அங்ஙனம் வெளிவந்தோர் தங்கள் ஆன்மீகப் பயணத்தில் தேக்கத்தைக் காணாது கடலை நோக்கி, ஓடும் ஆற்றைப் போல, கடவுளை முழுமையை நோக்கிப் பயணிப்பார்கள். இயேசு காட்டிய வழி இது. சைவம் காட்டிய வழி, இது புத்தர் காட்டிய வழி. இது இங்கு அனைவரும் உயிர்ப்பை நோக்கிப் பயணிப்போம். இப்பயணத்தில் நாமனைவரும் உடன் பயணிகளாவோம். மத நிறுவனங்களையும் மத அடிப்படை வாத்தையும் தழுவிய ஓர் உலகளாவிய ஆன்மீகத்தை வளர்ப்போம். வாழ்வோம். பிரிவு பட்டு ஒருவரை ஒருவர் அழித்து வரும் இந்த உலகிற்கு, இது வொன்றே உண்மையான வழியாகும். ஞானிகள் எந்த மதத்தை அடிப்படையாகக் கொண்டாலும், அந்த மதங்களை மேவி வாழ்ந்து ஞானத்துக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

விடுதலைக்குப் பாதை காட்ட வந்தவரே விடுதலையானார். வாழ்விற்கு வழிகாட்ட வந்தவரே வழியானார். உலகிற்கு ஒளி கொண்டு வந்தவரே, ஒளியானார். இதை உணர்ந்து, புரிந்து, ஏற்று வாழ்பவர்கள் உயிர்ப்பு விழாவைப் புரிந்து கொள்வார்கள். ●

கரவையூர்ச் செல்வம்

## உயிர்ப்பு ஞாயிறு



அதிகாலை நேரம் நான்காம் சாமம் (3 மணியிலிருந்து 6 மணிக்குள்) பொழுது புலராத இருட்டு நேரம். மனிதர்கள் கண்விழிக்கும் முன்பே.. அன்பு ஒரு சிறிய படையாக இயேசுவின் கல்லறையைத் தேடி நடந்து வருகிறது. மதலேன் மரியாள் கைகளில் படிகச் சிமிழோடும் சக தோழிகளோடும் இயேசுவின் கல்லறை தேடி வருகிறாள். ஒளியைத் தேடி இருட்டுக்குள் நடந்து வருகிறாள்.

யூத நம்பிகயையின்படி இறந்த மனிதனின் ஆவி மூன்றுநாள் அவனது உடலைச் சுற்றிக் கொண்டிருக்கும் .மூன்றாம் நாள் உடல் சிதைவுற்ற நிலையில், அடையாளம் மாறிப்போக, ஆவி நிரந்தரமாய் பிரிந்துவிடும். எனவே மூன்று நாட்கள் அந்த உடலை வாசனைத் திரவியங்களால் பூசி, மரியாதை செலுத்துவது வாடிக்கை. எனவே தான் மரியாள் தேடி வ ருகிறாள். ஓய்வு நாள் தொடங்கப் போகிறது. சடலங்கள் சிலுவையில் இருக்கக்கூடாதே என்று அவசர அவசரமாய் இறக்கப்பட்ட இயேசுவின் உடலுக்கு, ஆற அமர அஞ்சலி செலுத்தி, அடக்கம் செய்ய நேரமிருக்கவில்லை. பெரிய வெள்ளிக்கிழமை அன்று எனவே, அவசர கதியில் அடக்கம் செய்யப்பட்ட இயேசுவின் உடலுக்கு நறுமண பொருட்கள் பூச அவசரமாய் அதிகாலையிலேயே எழுந்து வருகிறாள் மதலேன் மரியாள்.

ஊர்ந்து ஊர்ந்து அருகே வந்து
எடுக்க நினைக்கும் பொம்மை
எட்டாதபோது... வேதனையோடு அழுகிறது குழந்தை

அதைப் போலவே தேடி வந்த தெய்வீகம், தேடி வந்த இடத்தில் இல்லையே என்ற ஏக்கத்தில் கண்ணீர் வடிக்கிறாள். அன்பு அழுது புலம்புகிறது. கண்ணுக்கு எட்டியது கைக்கு எட்டவில்லையே என்று கண்களே வேதனைப்படுகின்றன. மரணத்தில் அவர் பட்ட அவமானம் போதாதென்றா மரித்த பின்னும் அவமானப்படுத்த அவருடலைத் திருடிவிட்டார்கள்?

தேடுங்கள் கிடைக்குமென்றாரே... அவரையே தேட வைத்து விட்டாரே. தட்டுங்கள் திறக்குமென்றாரே, கல்லறை திறந்து அவரையே திருடி விட்டனரே! தேடிவந்தவள் தேம்பி நிற்கிறாள். அன்பு தவிக்கிறது. சட்டென்று காட்சிகள் மாறுகின்றன

பொழுது புலர்கிறது. இருள் விலகுகிறது. கல்லறையைக் காவல் காத்த காவலர்களும் அங்கில்லை. கல்லறைக்குள் வைக்கப்பட்ட இயேசுவும் அங்கில்லை. இயேசு அவள் பின்னால் நின்று கொண்டிருக்கிறார். உயிர்ப்பின் செய்தி முதன் முதலில், தேடி வந்த ஒரு பாவிக்கு கிடைக்கிறது. கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக ஆடை மாற்றிக் கொள்கிறது. அரையிருட்டில் நடந்து வந்தவள். ஒளி வெள்ளத்தில் உயிர்ப்பின் செய்தியை நெஞ்சில் சுமந்து கொண்டு ஓடுகிறாள்.

பெண்களின் அன்புக்கு ஆழம் அதிகம். அழுத்தம் அதிகம். அந்த அன்புக்குப் பரிசாக உயிர்ப்பின் செய்தியை முதலில் கேட்கும் பாக்கியம் பெறுகிறாள் மதலேன் மரியாள்.

அடுத்தாக...

இயேசுவின் கல்லறையைத் தேடி வருகிறார்கள் இரண்டு சீடர்கள். பேருது இயேசுவை அதிகமாக அன்பு செய்த தலைமைச் சீடர்.

யோவான் - இயேசு அதிகமாக அன்பு செய்த சீடன். இயேசு அங்கே இல்லை. ஆனால் அவரைப் பொதிந்து வைத்த துணிகள், அதேநிலையில் இருக்கின்றன. யோவான் இப்படி சிந்திக்கிறார். இயேசுவின் உடல் திருடப்பட்டிருந்தால் ஏன் இந்தத் துணிகள் மட்டும் இப்படி இங்கே இருக்க வேண்டும்? அதுவும் வைத்தது வைத்தபடியே, காலியான கல்லறை இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சி என்றால், கலையாத துணிகள் இரண்டாம் சாட்சியாக விளங்குகிறது.

சீடர்களில் இயேசுவை அதிகமாக அன்பு செய்தவர் பேதுரு. இயேசுவால் அன்பு செய்யப்பட்டவர் யோவான். இவர்கள் உயிர்ப்புக்கு இரண்டாம் சாட்சிகளாய் விளங்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோவானின் பார்வையில் உயிர்ப்பு

இறந்துபோன மனிதனை அடக்கம் செய்வதற்காக ஒன்று கூடிய உறவுகள் இழப்பின் வலிகளோடு இருந்த அவனது மனைவிக்கு ஆறுதல்கூறிக்கண்ணீர்சிந்தினாராம். நேரம் வந்ததும் பாடையைச் சுமந்து வீட்டிற்கு வெளியே வரும் போது தாழ்வாரத்தில் தட்டுப்பட இறந்த மனிதன் கண்விழித்துப் பேசத்தொடங்கினான். மிக்க மகிழ்வோடு அவனது மனைவியிடம் ஒப்படைத்து விட்டு உறவினர்கள் வீடு திரும்பினர். இன்னும் சில வாரங்களில் அவன் மீண்டும் இறந்து போனான். மீண்டும் கூடிய உறவுகள் பாடையில் அவனது உடலைச் சுமந்துகொண்டு போகும் போது "தாழ்வாரத்தைப் பார்த்துக் கவனமாகக் கொண்டு போங்க தம்பிமாரே" என்று மனைவிகூறினாராம். இறந்தவர் மீண்டும் உயிர்த்து விடுவாரோ.. என்று அச்சம் கொள்ளும் மனைவி தன் கணவன் சாவதையே விரும்புகிறாள் போலும்.

**பறிபோகும் வாழ்வு**

இப்படி வாழ்விற்கு 'இல்லை' என்று கூறுபவர்கள் பலர் நம்மிடையே உள்ளன.

- தம் உயிரையே பறித்துக்கொள்ளும் கோழைகள்
- மற்றவரின் உயிர்களைக் கொல்லும் வன்முறையாளர்கள்
- அடுத்தவரைக்கொல்லாமல்கொல்லும் சர்வாதிகாரிகள்.
- மற்றவரது வாழ்வைக் குட்டிச்சுவராக்கும் சுயநலவாதிகள்
- அடுத்தவரின் உரிமைகளையும், ஊதியத்தையும் சுரண்டி அவரது குருதியைக் குடிக்கும் பேராசைக்காரர்கள்.

என்று "வாழ்விற்கு - இல்லை" அல்லது வாழ்வை மறுப்போர் பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம்.

**வித்தியாசமான பார்வை**

இயேசுவின் உயிர்ப்பு என்னும் உண்மையை உலகிற்கு எடுத்துக் கூற விழையும் நற்செய்தி ஆசிரியர்களில் நான்காம் நற்செய்தியாளர் அதாவது யோவான் நற்செய்தியாளர் அவ்வுண்மையை வித்தியாசமான பார்வையில் நோக்குகிறார். "இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார். (யோவான் 20:1) யோவான் சிந்தனையில் இருள் அல்லது இரவு என்பது அடையாள ரீதியாக தீமை, அழிவு, சாவு போன்ற சக்திகளைக் குறிக்கும்.

உதாரணமாக இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இராவுணவு வேளையில் வெளியேறியபோது "அது இரவு நேரம்" என்கிறார் யோவான். இயேசு இறந்ததை எண்ணி மனம் நொந்து கவலையில் மூழ்கி இருந்த மகதலா மரியா கண்டது "வெறும் கல்லறையே". மரியா கண்ட வெறும் கல்லறையைக் கண்டபோது அவளது மனதில் பிறந்த எண்ணம் ஒன்றில் உடல் களவாடப்பட்டது அல்லது இடமாற்றம் செய்யப்பட்டது என்பதே.



இந்தப் பரபரப்பான செய்தியை சுமந்து கொண்டு சீடர்களின் முதன்மையான சீடரான பேதுருவிடமும், இயேசு தனி-அன்பு செய்த சீடரான யோவானிடமும் ஓடிச் செல்கிறார். அச் செய்தியைக் கேட்ட இருவரும் முன்னும் பின்னுமாக ஒருமித்து ஓடினர். அவர்களும் கண்டது வெறும் கல்லறையே. அன்புச் சீடரோ "கண்டார் நம்பினார்" (யோவான் 20:8) இங்கு

**அருள்பணி ஜீவா போல் அமதி**

நாம் எதைக் கண்டார்? எதை நம்பினார்? என்ற கேள்வியை எழுப்பலாம். அதைத் தொடர்ந்து இந்த இரண்டு ஆண் சீடர்களும் மரியாவை தனியே விட்டு விட்டுத் தம் வழி செல்கிறார்கள். அழுதுகொண்டிருந்த மகதலா மரியா சந்தித்த மனிதன் ஒரு தோட்டக்காரன் என்று நினைத்தாள். ஆனால் உயிர்த்த இயேசு 'மரியா' என்று அவரை அழைத்ததும் 'போதகரே' என்று அவள் விழித்துக்கொண்டாள்.

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து யோவான் நற்செய்தியாளர் தமது நற்செய்தியின் இறுதி நிகழ்வாக உயிர்த்த ஆண்டவர் தோமாவுக்குத் தோன்றினார். "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" (யோவான் 20:25) என்று பிடிவாதமாக இருந்த தோமா உயிர்த்த ஆண்டவர் பூட்டப்பட்ட கதவுகளைக் கடந்து வந்த போது அவரது தழும்பைப் பார்த்ததுமில்லை. விலாவைத்தொட்டதுமில்லை. ஆனோல், "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று ஆண்டவரில் சரணடைந்தார். அந்நேரமே யோவான் நற்செய்தி என்னும் நாடக மேடையின் திரை மூடுகின்றது. அதுதான் நூலின் கிளைமாக்ஸ் ஆகும்.

**நம்புவதால் நிலை வாழ்வு**

யோவான் தன் நூலை எழுதியதன் நோக்கம் "இயேசுவை இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும் நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே" (யோவான் 20:31) இயேசுவின் உயிர்ப்பை யோவான் நற்செய்தியாளரின் பார்வையில் நோக்கினால் அது மனித அறிவையும், ஆற்றல்களையும், ஆராய்ச்சிகளையும் கடந்த ஓர் இறை அனுபவமாய் துலங்கும். அன்புச்சீடர் கண்டது ஒரு வெறும் கல்லறையை. மகதலா மரியாள் சந்தித்தது ஒரு தோட்டக்காரனை. சீடர் தோமா பார்க்க தேடியது உடலில் காயங்களை. ஆயினும் இம் மூன்று கதாபாத்திரங்களும் இயேசுவின் உயிர்ப்பின் சாட்சிகளாயினர். ஏனெனில் அவர்கள் இறந்து உயிர்பெற்ற ஆண்டவரை நிறைவாக நம்பினார்கள். உயிர்ப்பு என்பது ஒரு இவ்வுலக வாழ்வின் முடிவில் இடம்பெறும் நிகழ்வு அல்ல. மாறாக ஒவ்வொரு இரவிற்கும் ஒவ்வொரு விடியல் உண்டு என்பது போல. ஒவ்வொரு இறப்பு அனுபவத்தின் போது மீண்டும் துளிர்விடும் பிறப்பு அனுபவமாகும். சாவு அனுபவங்கள் மத்தியிலும் உயிர்வாழும் இறைவனில் நம்பிக்கை வைக்கின்ற பொழுது இயேசுவின் உயிர்ப்பு நிஜமாகிறது.

**வாழ்வுக்கு 'ஆம்' என்போம்.**

கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு நிகழ்கால அனுபவம் ஆகும். அன்புச்சீடரும், மகதலா மரியாவும், தோமாவும் ஓடினார்கள், தேடினார்கள், ஆவல் கொண்டார்கள், வாழத் துடித்தார்கள். தம் வாழ்வின் தேடலில் நிலைவாழ்வு தரும் இயேசுவை சந்தித்தார்கள் அவரை உளமார நம்பினார்கள். வாழ்வை அழிப்பதற்கு அல்ல. வாழ்வை நிறைவாக கொடுப்பவர் தான் இயேசு என்று கண்டார்கள்.

உயிர்ப்பு இயேசுவின் காட்சி அவர்கள் வாழ்வில் மகிழ்வைப் பிறப்பித்தது. நற்செய்தியாளர் யோவானின் அன்பும், நம்பிக்கையும் கொண்ட பார்வை எம் இதயக் கண்களில் தெரியும் போது எமது வாழ்வை மட்டுமல்ல அடுத்திருப்பவருடைய வாழ்வை மதிப்போம். அவ்வாறகா நாம் வாழ்வுக்கு "ஆம்" என்று பதில் வழங்குவோம்.

நம்பிக்கை இழந்த நடை பிணாங்களாகவோ, அன்றேல் வாழ்வைத் தொலைத்த பித்தர்களாகவோ, அன்றேல் ஏனையோரின் வாழ்வை சுரண்டும் கொடியவர்களாகவோ அல்லாமல் வாழவும், வாழவைக்கவும் புறப்படுவோம், உயிர்த்த ஆண்டவராகிய இயேசு எம் இதயங்களில் மீண்டும் உயிர் பெறுவாராக.

# காயங்களின் ஈர வாசம்

என் காலில் இப்போது தடவிப்பார்த்தாலும் தெரியும் "முள்ளுக்கம்பி கிழித்த காயத்தின் தழும்புகள். புதுக் குடியிருப்பின் செம்மண் வீதிகளில் இப்போதும் சிலவேளை ஒட்டிக்கிடக்கலாம். கீழே விழுந்து கை உரஞ்சியபோது கசிந்து ஒழுகிய இரத்தத் துளிகள். மூக்கு அடிபட விழுந்த போது, உடைந்து ஒழுகிய இரத்தம் பார்த்து, சாகத்தான் போறேன் என்று பயந்து அழுத அந்தக் கிழுவைவேலி ஒழுங்கை இன்னமும் அப்படியே கண்ணுக்குள் நிற்கிறது.

இந்த இரத்தவாசம் வீசும் அந்தக் கணங்களை இன்று நினைக்கையில் இனிப்பாக இருக்கிறது. இவை எல்லாம் நான் சைக்கிள் ஓடப்பழகியபோது சிறிதும், பெரிதுமாய் என் ஞாபகத்தில் ஒட்டிக்கிடக்கும் காயங்களின் கதைகள்.

இன்று நான் சைக்கிளில் ஓடிக் கடந்திருக்கும் இத்தனை நீளமான தூரங்களையும் சாத்தியமாக்கியது, அன்று நான் இரத்தம் துடைத்துத் துடைத்துக் கடந்து வந்த காயங்கள்தானே. காயங்கள் வாழ்வை ஆசீர்வதிக்கின்றன. காயங்களால் நீங்கள் ஒருபோதும் அழுக்காகி விடுவதில்லை.

என் அலுவலக மேசையில் உள்ள கண்ணாடி மீன்தொட்டி மீன்கள் எவ்வளவு பாதுகாப்பானவை. இங்கு பெரிய திமிங்கலங்களால் கடிக்கப்படும், விழுங்கப்படும் ஆபத்தில்லை. பயங்கரச் சுனாமிகளால் வெளிகளில் தூக்கி எறியப்படும் பயங்கரமில்லை. அலைகளோடு அடிபட்டு, எதிர் நீச்சல் போடவேண்டிய அவசியமில்லை.

அதனால் இவற்றிற்குக் கடல்கள் சொந்தமில்லை. கூரைகள்தான் உண்டே தவிர, பரந்த ஆகாயம் பார்க்கும் அனுபவம் இல்லை. நிலா,



**அருட்பணி எஸ்.அஜந்தன்**

நட்சத்திரம், தென்றல், புயல், அலை எல்லாவற்றையுமே இழந்து விடுகின்றன என் தொட்டி மீன்கள். இவற்றிற்குப் போராட்டமே இல்லை, காயங்களும் இல்லை. ஆனால் பாவம் இவைகளுக்கு மீன் உலகின் வாழ்க்கையும் இல்லை. தாங்கள் பெரும் சமுத்திரங்களின் சொந்தக்காரர்கள் என்கிற உண்மை தெரிவதில்லை.

சொகுசான தொலைக்காட்சிக் கதிரைகளில் இருந்தபடி, கணனி விளையாட்டுகளில் மூழ்கிக்கிடக்கும். கால்களில் மண் ஒட்டாத, கிளித்தட்டு விளையாடி விழுந்து முழங்கால்களில் இரத்தம் வராத, வெய்யில் படாமல் மிகப் பாதுகாப்பாக வளர்க்கப்படுகிற நகர்ப்புற குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் என் தொட்டி மீன்களே நினைவுக்கு வருகின்றன. இவர்கள் காளான் குஞ்சுகள். கொஞ்சம் அதிகமாய் வெயில் அடித்தாலோ, வெள்ளம் வந்தாலோ பொசுங்கி விடுவார்கள். அல்லது உடைந்து விடுவார்கள்.

இவர்கள் சமுத்திரங்களையும், வானங்களையும் இழந்துவிட்ட மீன் குஞ்சுகள். அது விஞ்ஞான வகுப்பு ஆய்வுகூடம்.

ஆசிரியர் விளக்கிக்கொண்டிருந்தார். பிள்ளைகளே! "நச்சு மயிர்கொண்ட மயிர்க்கொட்டி எப்படி மிகஅழகான வண்ணத்துப் பூச்சியாக மாறுகின்றது பாருங்கள். இது ஒரு இயற்கையின் அதிசயம்".

மாணவர்கள் ஒரு சமுத்திரத்தைக் குடிக்கும் தாகம் நிறைந்த கண்களோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் சொன்னார் "ஒரு மயிர்க்கொட்டி தன்னைச் சுற்றி ஒரு மண்கூடுகட்டி, அதற்குள் சில காலம் வாழும். அந்த நெருக்கமான கூட்டுக்குள் மூச்சடங்கும். பெரிய வேதனைப்படும். ஆனால் இதோ பாருங்கள் தெரிகிறது இந்தச் சின்னத்துளை. இதன் வழியே அது இப்போது வெளிவரத் தொடங்கும்".

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் இறுதி உணவுக் கனவு

**குருத்துவம் திருச்சபைக்கான ஓர் மாபெரும் கொடை**

ஆங்கிலத் திரைப்பட நடிகர்களில் ஒருவரான, அலெக் கின்னஸ் (Alec Guinness) அவர்கள், பிறந்தது முதல், தந்தை யாரென்று அறியாமல் வளர்ந்தவர். அவர், ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர் என்றாலும், இளமைப் பருவத்தில், மதம் சார்ந்த விடயங்களில் அக்கறை ஏதுமின்றி வாழ்ந்தார். தன் 19வது வயதில், மேடை நாடகங்களில் பங்கேற்று, பின்னர், திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பும் பெற்றார்.

புகழ்பெற்ற எழுத்தாளர் G.K.Chesterton அவர்கள், கத்தோலிக்க குரு ஒருவரை மையப்படுத்தி உருவாக்கிய Father Brown என்ற சிறுகதைகளின் தொகுப்பு, திரைப்படமாக உருவானபோது, அதில், அலெக் கின்னஸ் அவர்கள், Father Brown பாத்திரத்தில் நடித்தார். இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு, பிரான்ஸ் நாட்டின் ஒரு கிராமத்தில் நடைபெற்றது.

ஒருநாள் மாலை, அலெக் அவர்கள், அன்றைய படப்பிடிப்பை முடித்த கையோடு, நடிப்பதற்காக அணிந்திருந்த அங்கியைக் கழற்றாமல், தான் தங்கியிருந்த ஹோட்டலை நோக்கி நடந்து சென்றார். அப்போது, வழியில், ஒரு சிறுவன், அவரை, உண்மையிலேயே ஓர் அருட்பணியாளர் என்று எண்ணி, ஒரு புன்சிரிப்புடன், அவரிடம் ஓடிவந்து, அவரது கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அவருடன் நடந்து சென்றான்.

தன் மனதில் ஆழமாகப்பதிந்த அந்நிகழ்வு, கத்தோலிக்க மதத்தைப்பற்றித் தான் கொண்டிருந்த தவறான எண்ணங்களை மாற்றியது என்று, அலெக் அவர்கள், தன் சுய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்: "முன்பின் எவ்வித அறிமுகமும் இல்லாதபோதும், ஒரு சிறு குழந்தையின் மனதில், ஓர் அருள்பணியாளரின் உருவம், இவ்வளவு நம்பிக்கையை உருவாக்கமுடியும் என்றால், அந்த கத்தோலிக்க மறையில், நிச்சயம் நல்லவை பல இருக்கவேண்டும்" என்று அவர் எழுதியுள்ளார். அடுத்துவந்த ஆண்டுகளில், ஒருவர்பின் ஒருவராக, அலெக் கின்னஸ், அவரது மனைவி, மெருலா (Merula), மகன் மேத்யூ மூவரும் கத்தோலிக்கத் திருமறையைத் தழுவினர்.

**போர்க்காலத்திலும் கொரோன காலத்திலும் குருத்துவம் கொடுத்த நம்பிக்கை**

நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து புனித வியாழனில் ஏற்படுத்திய குருத்துவம் அந்தளவு நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இத்தனை ஆண்டுகளாக ஆயிரம் ஆயிரம் அருட்பணியாளர்களின் பணிவாழ்வின் ஊடாக நம் மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக இருந்துள்ளது. சிறப்பாக போர்க்காலத்திலும் இந்தக் கொரோனாக்காலத்திலும் இறைவன் தன் உடன் இருப்பைக் குருத்துவத்தினூடக வெளிப்படுத்தியுள்ளார். போர்க்காலத்தில் மக்களோடு மக்களாய் இருந்து இறை பிரசன்னத்தை வெளிப்படுத்திய குருத்துவத்துக்காக குருக்களுக்காக நன்றி கூறுவோம். போர்க்காலத்தில் ஆபத்தான சூழ்நிலைகளில் பணி செய்து மரணித்த எம் குருக்களை நினைவு கூருவோம். பல நாடுகளில் இந்தக் கொரோனா காலத்தில் மக்களுக்கு பணி செய்து தமது இன்னுயிரைத் தியாகம் செய்த குருக்களை நன்றியோடு நினைவு கூருவோம்.



அருட்பணி ம.டேவிட்

**நற்கருணை இறைவனின் உடன் இருப்பு**

இறைமகன் இயேசு இறைமகன் இயேசு தன் பணிவாழ்வு முடித்து தந்தையிடம் செல்ல வேண்டிய நேரம் வந்ததும் தன் பிரசன்னம் இந்த உலகில் என்றுமே இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவே நற்கருணையை ஏற்படுத்தினார். இதோ உலகம் முடியும் வரை உங்களோடு இருக்கின்றேன் என்ற வாக்குறுதி இந்த நற்கருணைப் பிரசன்னத்தினூடக நிறைவேறுவதைக் காணுகின்றோம். "ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க வருவாயோ இறைவா, அந்த சிறு பொழுதே ஒரு யுகமாய் மாறும் அறிவாயோ என் தலைவா." என்று ஒவ்வொரு நாளும் நற்கருணைக்கு முன்பாக இருந்து ஒவ்வொரு முறையும் பாடும் போது யேசுவின் அன்புப் பிரசன்னத்தை நாம் மிகவும் நெருக்கமாக உணர்ந்து கொள்ளுகின்றோம்.

**கொரோனாக் காலத்தின் மிகப்பெரும் துன்பம்**

இந்தக் கொரேனா காலத்தில் மக்கள் அனுபவித்த மிகப்பெரும் வேதனை திருப்பலியில் கலந்து கொள்ள முடியவில்லையே என்பதுதான் என்பதை பலர் கூறக் கேட்டிருக்கின்றேன். இப்போதும் வெளிநாடுகளில் இருக்கின்ற பல எம் உறவுகள் திருப்பலியில் தாங்கள் பங்கு பெற முடியாது இருக்கின்றமையினால் திருப்பலிக்காக நற்கருணைக்காக ஏங்கிக்கொண்டு இருக்கின்றார்கள். இயேசு உருவாக்கிய குருத்துவமும் நற்கருணையும் மக்களுக்கு அவர்களின் வாழ்வில் பெரும் சக்தியாகவும் ஆறுதலாகவும் இருப்பது வெள்ளிடை மலையாகும். இந்த கொரோனா காலத்தில் மூன்று மாதங்களுக்கு மேல் நாம் ஊரடங்கில் இருந்த போது ஒவ்வொரு பங்கிலும் வெளிநாடுகளில் உள்ள பங்குமக்கள் தங்களிடம் இருந்த வழங்களை எம் மக்களோடு பகிர்ந்து கொண்டமை குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். கொரோனாக் காலத்தின் கடினமான வாழ்வுக்கு எம்மக்களின் பகிர்தலே ஆறுதல் அளித்தது. நம் கிறிஸ்தவ வாழ்வில் பகிர்தலின் அடித்தளமே நற்கணையாகும். குருத்துவத்தின் அடித்தளம் பாதம் கழுவுதலாகும்

ஏப்பிரல் மாதம் 11ம் திகதி வத்திக்கானில் ஓர் அற்புதம் நிகழந்தது. தெற்கு சூடான் தலைவர்களுக்கான இரண்டு நாள் தியான முடிவில் இந்த அற்புதம் நிகழ்ந்தது. இறுதி நாளில் தெற்கு சூடான் அரசத்தலைவர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் மற்றும் இதர தலைவர்களைச் சந்தித்த திருத்தந்தை அங்கு நடைபெறுகின்ற சமாதானத்திற்கான பேச்சு வார்த்தை தொடரப் பட வேண்டும் என்று கூறியது மட்டுமல்ல அவர்களின் கால்களுக்கு முன் முழந்தால் படியிட்டு அவர்களின் கால்களை முத்தமிட்டு இரந்து சமாதானத்திற்காக உழையுங்கள் என்று கேட்டுக் கொண்டார். 1.2 பில்லியன் கத்தோலிக்க மக்களுக்குத் தலைவராக இருக்கின்ற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு தலைவர் இவ்வாறாக மக்களின் மகிழ்வான வாழ்வுக்காக அரசியல் தலைவர்களின் கால்களில் விழுந்தது அகில உலகையே உலுக்கியது. இது பற்றி தெற்கு சூடான் உப ஜனாதிபதி குறிப்பிடுகையில், "நான் இது போன்றதொன்றை ஒருபோதும் என் வாழ்க்கையில் காணவில்லை, என் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது." என்று குறிப்பிட்டார். இங்கே புனித வியாழனில் நடை பெறும் பாதம் கழுவும் சடங்கு ஒரு சாதாரண நாளில் வத்திக்கானில் திருத்தந்தையின் வாழ்வில் நிகழ்வதைக் காணுகின்றோம்.

எனவே நற்கருணையையும் குருத்துவத்தையும் ஏற்படுத்திய .யேசு குருத்துவம் எப்படி வாழப்படவேண்டும் என்பதனை பாதம் கழுவும் சடங்கினூடாக வாழ்ந்து காட்டுகிறார். குருத்துவம் மாத்திரம் அல்ல எமது திருஅவையிலுள்ள அனைத்துப் பணியாளர்களுமே இவ்வாறு தமது பணிகளில் ஒருவர் மற்றவரின் பாதங்களைக் கழுவ அழைக்கப்படுகின்றோம்.

**அன்புக்கட்டளை**

கிறிஸ்தவத்தின் அடிநாதமே அன்பாகும். எனவே தான் இயேசு நற்கருணை குருத்துவம் போன்ற அருட்சாதனங்களை ஏற்படுத்திய-அதே இரவில் கிறிஸ்தவத்திற்கு உரித்தான அன்புக்கட்டளையைத் தம் சீடருக்குக் கொடுத்தார். "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள்.": இதுவே இயேசுவின் இறுதி ஆசையாகும். இதனையே ஆதித்திருச்சபை தங்கள் ஒன்று கூடல்களில் செய்த படியால் திருஅவை மிகக் குறுகிய காலத்திலேயே மிகப்பெரும் வளர்ச்சி கண்டது. சாட்சிய மிக்க திருஅவையாக மாறியது. இதன் அடிப்படையிலேயே ஆசியாவில் திருஅவைக்கு ஒரு எதிர்காலம் இருக்க வேண்டும் என்றால் எம்பங்குகள் அன்புமயமாக அன்பியமாக மாற வேண்டும் என்று ஆசிய ஆயர் மன்றம் அறைகூவியது. இந்த ஆண்டில் இலங்கைத் திருச்சபை இந்தச் சிந்தனையை வலியுறுத்தும் இக்காலத்தில் யேசுவின் அன்புக்கட்டளையை எம் பங்குகளில் நடைமுறைப்படுத்துவோம். நாம் அன்பியமாவோம். திருத்தந்தை "நாம் எல்லோரும் சகோதரங்களே" என்ற திருமடலில் திருச்சபைக்கு இருக்க வேண்டிய மூன்று முக்கிய பண்புகளைக் கோடிட்டுக் காட்டுகிறார். அவையாவன சகோதரத்துவம் ஒற்றுமை நட்புறவு என்பனவாகும். இவை மூன்றும் அற்ற தலத்திருச்சபை கனிகொடாத திருஅவையாக மாறி விடுகின்றது.


எனவே கோவிட் 19 காலத்தில் நாம் நினைவு கூரும் இயேசுவின் இறுதி உணவுக்கனவை நனவாக்குவோம்.

# இது என் உடல்

**'இது என் உடல்'** இந்த வார்த்தைகள் திருப்பலியின் சிகரம். கிறிஸ்துவுக்கு முன் தன்னை மறைத்துக்கொண்டு திருஅவை தன்னுடையதாக எந்த வேறு வார்த்தையையும் உச்சரிப்பதில்லை. தன் சொந்த செயலாக வேறு எதையும் செய்வதுமில்லை. அர்ச்சிப்பும் இராவுணவும் முன் கூட்டியே அறிவிக்கப்படுகின்றன. இது அருளடையாளமான உடன்படிக்கையின் உணவு. இதில் இயேசு காட்டிக்கொடுக்கப்படுவதும் பாடுகள் முழுவதும் முன் குறிக்கப்படுகின்றன. மனித மீட்புக்காக தன்னை மனமுவந்து அளிக்கிறார் இயேசு.

திருஅவையின் தொடக்கக்காலத்திலேயே திருப்பலியின் முக்கியத்துவத்தை கிறிஸ்தவர்கள் உணர்ந்தார்கள். திருத்தூதர் பணிகளும் திருமடல்களும் பல முறை இந்தக் கொண்டாட்டத்தைப் பற்றிப் பேசுகின்றன. கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, "இது உங்களுக்கான என் உடல், என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, "இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார் (1 கொரி 11:24-25).

நற்கருணையை மையமாகக் கொண்ட இராவுணவுதான் வசீகர வார்த்தைகளையும் அதன் வழிமுறையையும் வரையறுக்கிறது. குரு எழுதப்பட்டபடியே கிறிஸ்துவாகவே இருக்கிறார். எனவேதான் நற்செய்தியில் காணப்படும் செயல்களையே அவர் செய்கிறார். தன் குருவைப்போல வானத்தை நோக்கித் தன் கண்களை உயர்த்துகிறார். இயேசு அப்பத்துக்கு ஆசியளித்ததுபோல இவரும் ஆசியளிக்கிறார். முழந்தாழ் படியிடுவது மட்டும் [illegible] இருக்கும்



அருட்சகோதரி லில்லி

இறைவனை நோக்கிக் குரு செய்யும் தனிப்பட்ட ஆராதனை இது. குரு உச்சரிக்கும் வார்த்தைகள் இயேசுவே உச்சரித்த வார்த்தைகள். அவை "ஆற்றல் மிக்க பெரிய வார்த்தைகள்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையில் ஊடாடும் உயிர்ப்பும் உயிர்ப்பில் உறையும் சிலுவையும்

அருட்பணி அமிர்த ஜெயசேகரம்



**மூன்று மார்க்கங்களில் உயிர்ப்புத் தரிசனம்**

இந்து மறையில் மூன்று மார்க்கங்கள் (வழிகள்) உண்டு. முதலாவது பக்திமார்க்கம் (பற்றுறுதி, மன்றாட்டுக்கள்) இதில் புனித மேரி மதேலேனாளின் யேசுவில் கொண்ட உணர்வுபூர்வமான பற்றுறுதி வெளிப்படுகிறது. இவள் ஆழமான அன்பின் முன்னுதாரணம். அவளுடைய அன்பரின் உடலுக்கு வாசனைத்திரவியங்கள் கொண்டு ஓடுகிறாள் அங்கே உயிர்த்த கிறிஸ்துவின் தரிசனம். "நான் ஆண்டவரைக் கண்டேன்" இதுதான் உயிர்ப்பு விழாவின் முதல் நற்செய்தி. இரண்டாவதாக எம்மை ஞானமார்க்கத்துக்கு (அறிவு சார்ந்தது) அழைக்கிறது. இறைவனின் வார்த்தைகள் முழுமையாக அறியமுடியாது என்ற தாழ்ச்சி தேவை. இது எம்மைப் புனித தோமையாரின் இறைத்தேடலுக்கு விடையாக "என்ஆண்டவரே என் தேவனே" என்றார். மூன்றாவது கர்ம மார்க்கம் (செயலும் சாட்சிய வாழ்வும்) சிலுவையை பூரணமாக ஏற்றுக்கொண்ட திருத்தூதரின் மறைசாட்சிய வாழ்வு பவுல் அடியார் சொல்லுவார்: கிறிஸ்துவை வார்த்தையால் மட்டுமல்ல செயலாலும் சாட்சிய வாழ்வாலும் பிரதிபலிக்கவேண்டும் "நாம் எமது உடல்களில் கிறிஸ்துவின் இறப்பைத் தாங்கி செல்கிறோம்... (2 கொ. 4:10)

**ஆவியில் உறைந்திருக்கும் உயிர்ப்பு**

ஒரு மறைபொருள் அல்லது மறையுண்மை என்ற சொற்பதத்தின் உள்ளீடு உண்மை மறைந்துள்ளது என்பதுதான். கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வது அறிவியலால் மட்டுமல்ல அனுபவ ரீதியாக உள்ளுணர்வுகள் மூலமாகவும் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் ஒரு உண்மையைத் தொடும் பொழுது சொற்களுக்கு அப்பால் போகமுடியாத வரையறை யொன்றை அடையாளங்களைப் பயன்படுத்த தள்ளப்படுகிறோம். நாம் புலம்புவோம் அழுவோம் நடனம் ஆடுவோம், இசைகளை ஒலிப்போம், வர்ணம் தீட்டுவோம், சிலைகளைச் செதுக்குவோம். நிறங்கள், ஒலிகள், தொடுகைகள் முத்தங்கள் .... இவைகள் எமது ஆழ்மன உணர்வுகளை மிகப்பலமாக சொற்களை விட பிரதிபலிக்கிறது. வாழ்வும் இறப்பும் எமது ஆழ்மன அனுபவங்கள். புனித வாரம் இதன் மையத்தில் சுழருகிறது.

**ஆவிவாழ்க்கைக்குத் தகுதியாக்கும் உயிர்ப்பு**

மரணம் தான் இறுதி முடிவான வார்த்தையல்ல. வாழ்வு மீண்டும் புதிப்பிக்கப்படுகிறது. முழுமையாக்கப்படுகிறது வளங்களால் நிரப்பப்படுகிறது. இதைத் தான் ஆவியில் உறைந்திருக்கும் உயிர்ப்பு விழா என்கிறோம். முழுமையாக வார்த்தைகளால் வடிக்கமுடியாத பெரும் திருவிழா. இது ஓர் அற்புத விழா. இறந்த கிறிஸ்து வாழ்வுக்குள் ஆவியில் சங்கமித்த விழா - வேறுபட்ட வாழ்வு உடல் ரீதியாக அல்ல ஆனால் அனைத்திலும் வேறுபட்டது. உயிர்த்த ஆண்டவர் ஆவியென்று பவுல் அடிகளார் கூறுகிறார். திருத்தூதர்கள் சொல்லுவார்கள் நாம் ஆண்டவரைக் கண்டோம். உயிர்ப்பு நிகழ்வு கிறிஸ்துவில் மிக சக்தி வாய்ந்த இறைவனின் ஆவி குடிகொண்ட நிகழ்வு. தற்பொழுது அது எம்மோடு பகிரப்பட்டது. திருத்தூதர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள் வாழ்ந்தார்கள். அதன் நிறைவை அனுபவித்தார்கள். உயிர்ப்பு நிகழ்வு ஆவியின் வாழ்வு. அது என்னுடைய தென்பதை உறுதிப்படுத்தும்.

இவ்வுயிர்ப்பு எம்மை ஆவிவாழ்விற்கு தகுதி உடையவர்களாக்குவதும் எமது வாழ்வியலுக்கு ஒரு நிலை மாற்றத்தை கொண்டுவருவதற்கான பெரும் சக்தி. இன்னும் ஆழமாக உயிர்ப்பை அனுபவிப்பதாயின் நாமும் கிறிஸ்து வழிசென்ற பாடுகளை உள்வாங்கும் பொழுது ஒரு மனிதப்பிறவியாக வாழலாம்.

**பயத்தை விடுவிக்கும் உயிர்ப்பு**

உயிர்ப்பின் மறைபொருட்களில் முதலாவது ஆவியின் கொடை பயத்திலிருந்து விடுவிப்பு. உயிர்த்த கிறிஸ்துவின் ஆவி பயத்தைக் கொடுப்பதல்ல ஆனால் நம்பிக்கையின் தன்னிறைவைக் கொடுப்பது. பிராங் மொறிசன் உயிர்ப்பு நிகழ்வு ஒரு புராணக் கதை இதன் உண்மைத்தன்மை அறிவதற்கு ஒரு ஆய்வில் இறங்கினார் வரலாறுரீதியாக நடந்தவற்றுக்கு பல சந்தேகங்களை எழுப்பினார். ஆனால் அவரை உயிர்ப்பின் இரகசியத்தை நம்ப வைத்தது திருத்தூதர்களின் சடுதியான மாற்றம். கிறிஸ்துவின் உயிர்ப்பு திருத்தூதர்களின் வாழ்வைப் புரட்டிப்போட்டது. பயந்தாங் கொள்ளிகளாக இருந்தவர்கள் தமது உயிரையும் உடலையும் பூரணமாக அர்ப்பணித்து அனைவரும் மறைசாட்சியான நிகழ்வு அவர் மனதை மாற்றியது.

பல நாடுகளில் சாதாரண மக்கள் குறிப்பாகப் பெண்கள் சக்தி வாய்ந்த அரச இயந்திரத்துக்கு முன்னால் எதிர்ப்பைத் தெரிவிப்பதுமட்டுமல்ல தொடர்ச்சியான போராட்டங்கள் ஊடாக வெற்றியடைந்துள்ளார்கள். எமது நாட்டிலும் பயத்தில் அடங்கிப் போயிருந்த தமிழ்ச் சமூகம் வீறுகொண்டு பொத்துவில்-பொலிகண்டி பேரணியில் ஈடுபட்டது உயிர்த்த ஆவியின்செயல்.

**சிலுவைச்சாவு உயிர்ப்பின் வித்து.**

மரபுவழி யாவேயின் துன்புறும் அடியான் என்று கிறிஸ்து வர்ணிக்கப்படுகிறார். ஆனால் துன்பத்தை மிகைப்படுத்தி அதை மாட்சிப்படுத்தும் எண்ணக்கருவைக் கொடுத்தாலும், துன்பம் வாழ்வில் ஏற்கக்கூடிய யதார்த்தமல்ல. ஆனால் கிறிஸ்துவின் துன்பியல் வாழ்வும் சிலுவை மரணமும் வேறுபட்டது. அவர் குறிக்கப்பட்ட இலட்சியத்திற்காக துன்பங்களை ஏற்றுக் கொண்டதும் அக்காலத்தில் இடம் பெற்ற சமய சமூக அரசியல் அடக்கு முறைகளுக்கு எதிராக நீதியையும் உண்மையையும் தெரிவு செய்து மாறுபட்டபண்பாட்டை உருவாக்க முயன்றதும் முக்கியமாக மனிதகுலத்தின் மீட்புக்காகத் தன்னைக் கையளித்ததாகும். ஒரு நோக்கிற்காக விரும்பித் துன்பியலை ஏற்றுக்கொள்ளல் வாழ்க்கையில் உயர்தர பெறுமானங்களிற்கு மனிதவளங்களிற்கும் வித்திடுகிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)


திருச்சிலுவையை கழுத்தில் அணிவது சாதாரண மக்களுக்கு ஏற்புடையதல்ல. அதனைத் துறவிகளும், குருக்களும் தான் அணிய வேண்டும்" இது எமது சமூகத்தில் முதியவரால் வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகும். இன்னமும் வீடுகளில் சிலுவைகள் வைக்கப்பட்டிருப்பதை நாம் விரும்புவதில்லை. இது ஏன் என்னும் கேள்வி என்னுள் எழுகின்றது.

சிலுவையை யாருக்கும் பெரிதாகப் பிடிப்பதில்லை. சிலுவைகள் இரத்தமும் கண்ணீரும், வலிகளும், அவமானங்களும் மரண ஓலங்களும் நிறைந்தவை. சிலுவை என்றவுடன் துன்பங்கள் எம் கண்முன் வந்து போகின்றன. துன்பம் என்ற வார்தையைக் கேட்கும் போதெல்லாம் விலகி ஓட நினைக்கின்றோம். உயிர்ப்பு ஞாயிறுகளைப்போல மரண வெள்ளிக்கிழமைகளை எம்மால் நேசிக்க முடிவதில்லை.

ஆனால் இரத்த வாடையடிக்கும் கல்வாரிகளையும், மரணம் மண்டியிருக்கும் கல்லறைகளையும் கடந்து வராவிட்டால் நாம் உயிர்ப்புக்களை சந்திக்கும் சாத்தியமில்லை. உயிர்ப்பு ஞாயிறு முடிந்ததும் சிலுவைகள் தூக்கியெறியப்பட வேண்டியவையல்ல. குருத்தோலை ஞாயிறில் ஓசன்னா பாடியதும் செய்யப்படும் குருசு அடுத்த வருடம் விபூதிப்புதனில் சாம்பல் ஆகும் வரை எம்முடன்

# உயிர்த்த ஞாயிறுபோல பெரிய வெள்ளியை ஏற்றுக்கொள்வோமா?

அருட்சகோதரி றேமலா அன்ரனி



பயணிப்பவை. இதுவே திருவழிபாட்டு முறைமை. எத்தனை பேர் இதனைச் சரியாகப் பின்பற்றுகின்றோம். அது போலவே எமது வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவையே சிலுவையின் பயணங்கள். தனியே எமது வாழ்வு உயிர்ப்பு ஞாயிறுடன் மட்டும் பயணித்தால் அதில் சுகமிருக்காது. சிலுவை சேர்ந்த வெள்ளிகளும் எமது வாழ்க்கைப் பயணத்தில் இணையும் போது எமது வாழ்வு அர்த்தமுடையதாகும். நாங்கள் முட்கள் இல்லாத ரோஜாச் செடிகள் கேட்கிறோம். இடிகள் இல்லாத வானத்தை விரும்புகின்றோம்.

கல்வாரி செல்லாத இயேசுவை ஏற்றுக் கொள்ள ஆசைப்படுகின்றோம். இறப்புக்கள் இல்லாத உயிர்ப்புக்களை எதிர்பார்க்கின்றோம். ஆனால் இயேசு தனது போதனையில் என்னைப் பின்பற்ற விரும்பும் எவனும் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றட்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஒரு கரிய இருளை பூமி கடக்க அனுமதிப்பதால் தான் இன்னொரு சூரிய உதயம் பூமிக்குக் கிடைக்கிறது. பிரசவ வலிகள் இல்லாமல் ஒரு தாய் மழலையின் சிரிப்பைப் பார்க்க முடியாது. படகுகள் கரையில் கட்டப்பட்டிருக்கும் வரை அதன் பெறுமதி தெரிவதில்லை. எப்போது உப்புக்கடலில் பயணம் செய்கின்றதோ அப்போதுதான் அதன் பெறுமதி உயர்வாகும்.

நாம் கைகூப்பி வணங்கும் வழிபடும் இறைவன் காயப்பட்ட, கசையடிபட்ட சிலுவையில் அறையப்பட்ட முள்முடி சூட்டப்பட்ட இயேசுவே தான். ஆனால் மாறாத வடுக்களுடன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தார். ஆனால் எம்மால் காயங்களை நேசிக்க முடிவதில்லை. சிலுவை போல வரும் துன்பங்களை ஏற்க மறுக்கின்றோம். எமக்குத் துன்பம் தரும் இறைவனையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

நாம் செல்ல வேண்டிய பாதை ஒடுக்கமானதுதான். இதுவே மீட்பின் பாதை. உயிர்ப்பினைத் தந்த சிலுவையின் பாதை. இயேசு தான் பயணித்த பாதையைத் தொடர்ந்து எம்மையும் பயணிக்க அழைக்கின்றார்.

நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகின்றோம். ஆனால் இயேசுவின் உயிர்ப்புக்கும், சிலுவையோடு அவர் பயணித்த கல் வாரிப் பயணத்திற்கும் சாட்சியமளிக்காமல் எமது வாழ்வினால் கிறிஸ்தவர்கள் எனக் காட்ட முடியாதவர்களாக வாழுகின்றோம். எம்மையே நாம் மறுக்க முடியாமல் சுயநலம் கொண்டு வாழவே விரும்புகின்றோம். உலகப்போக்கிற்கேற்ப விஞ்ஞான தொழிநுட்ப கைபேசி அலைபேசி பின்னல்களுக்குள் அகப்பட்டு, நுகர்வுச் கலாசாரத்திற்குள் சிக்கி வெளிவரமுடியாமல் மூழ்கிக் கிடக்கின்றோம். சினிமா உலகினில் தொடர் நாடக புதுமை வாழ்விற்குள் எம்மைத் தொலைத்து பாலியல் இச்சைகளுக்குள்ளும் புதைந்து, உறவுகளை இழந்து அன்பில்லாமல், உணர்வில்லாமல் அரித்தமற்ற மனித வாழ்வை வாழத் துடி துடிக்கின்றோம். ஆனால் இயேசு நமக்குக் காட்டிய பாதை தன்னல மறுப்பையும், பிறரன்புச் செயல்களையும், நாளாந்த சிலுவைகளையும் கொண்ட கரடு முரடான பாதை. இதனூடாக பயணித்து கிடைக்கும் ஒவ்வொரு உயிர்ப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்க அழைக்கின்றார் இயேசு.

'கிறீஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகின்றேன். கிறிஸ்துவையும் அவர் தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையம் அறியவும், அவருடைய துன்பங்களில் பங்கேற்று இறப்பில் அவரை உத்திருக்கவும் விரும்புகின்றேன்" (பிலி.3:10) என்னும் புனித பவுல் அடிகளாரின் செய்திக்கேற்ப இயேசுவுக்காக வாழ்ந்து இறப்பதில் அவரோடு ஒன்றிணைவோம். இதுவே இயேசுவின் உயிர்ப்பு விழா எம்மில் அர்த்தம் பெற வழிவகுக்கும்.

கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? ஏனெனில் சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியானரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வெறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட இறை அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது. (உரோ.8:38)

எனவே இறை அன்பில் ஆழமாகி எமது வாழ்வின் சிலுவைகளை நல்ல மனதுடன் ஏற்று இயேசுவின் பாதையில் வீறுநடை போடுவோம். இதனால் உயிர்ப்பின் வெற்றியை எம் வாழ்வில் அனுபவிப்போம். பிறரையும் அனுபவிக்க [illegible] வழிகாட்டுவோம். வாழ்வாகுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கலசம்

## ஈஸ்ரர் சிறப்பிதழ்

## இயேசுக் கிறிஸ்து நம்முடனே

பொல்லா உலகின் மாயைக் கவர்ச்சியில்
பொசுங்கி மடிந்திடும் விட்டில் பூச்சிகள் போல்
நல்லோர் வழிகளை வெறுத்திடும் மானிடர்
நரகின் பாதையை அடைந்து விடாமல்
வல்லமை உள்ள தந்தையின் திருமகனே
வற்றாத உமதன்பின் மன்னிப்பை அருளுமே
எல்லோரும் வாழ்வு பெறும் உம் வழி தொடர்ந்திட
எல்லையில்லா அருளினூற்றே வல்லமை தாருமே

எம்மை மீட்கவந்த இயேசு ஆண்டவரே
எமக்காசி தந்து நாளும் காருமே
உம் முயிர் கொடுத்து உலகையே மீட்டவரே
உரிமை வாழ்வினை எமக்குத் தாருமே
நம்மை நாமே பிரித்து ஆள்கின்றோம்
நட்புடன் வாழ்ந்து நன்மைகள் செய்திட
இம்மை வாழ்வினில் மறுவாழ்வின் அருள் சேர்க்க
இறைவா உந்தன் நல்லருள் தாருமே

மண்ணில் விதைமடிந்து புதுவுயிர் முளைப்பது போல்
மன்னுயிர்க்காய் உயிர் கொடுத்து உயிர்த்த இயேசுவே
விண்ணக வாழ்வின் முன்சுவையாய் இவ்வுலகில்
விசுவாச வாழ்வினில் உறுதியுடன் செயற்பட
கண்ணினும் மேலாம் இறைவார்த்தை ஒளியினில்
கன் மலையாம் இயேசுவின் வாழ்வின் வழியினில்
திண்ணிய மனத்துடன் திரு அவையாய்ப் பயணிப்போம்
திருமகனாம் இயேசுக்கிறிஸ்து நம்முடனே இருக்கின்றார்

அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

## சுமத்தாது சுமப்போம்



இயேசுவின் குருதி வெள்ளத்தில்
மூழ்கிசெத்துப் போனது
பாவங்கள்

உலகம் அழுகிற அளவுக்கு
மரிமாறப்பட்டது கடவுளின் அன்பு
ஓசான்னா எல்லாம்
ஒப்பாரிகளாக மாறியதால்
ஒலிவ மரக்கிளைகள் எல்லாம்
ஒடிந்து போய்க்கிடக்கின்றது
பிலாத்து கை கழுவிய தண்ணீர் கூட
ஆசீர் நீராய் மாறிவிடும்
அவல காலத்தில்
அந்தரித்துக் கிடக்கிறோம்

கல்வாரிப் பயணங்களில்
கழுவலாம் பாவச்சுமை என
கருதுவதில் பயன் இல்லை
மனதில் மாற்றம் இன்றி
மத அனுட்டானங்கள்
மண்ணில் எமக்கு எதற்கு?

பசாம் ஓதிப் பாவம் கழுவலாம் என்றால்
நல்ல கள்வனுக்கு அடுத்துதிருந்தவனும்
அன்றைக்கே
வான்வீடு சென்றிருப்பான்
சிலுலையில் அறைந்த யூதர்களும்
சிம்மாசனம் ஏறியிருப்பர்
முப்பது வெள்ளிக்காசும்
முகூர்த்தப் பரிசாக
முன்னணி பெற்றிருக்கும்

தவக்காலம் முடிவுற்று
உயிர்ப்பு விழாவும் வந்துற்றது
தவக்காலத்தில் என்ன செய்தோம்?
வீட்டு வளவில் கட்டிய
ஆட்டு கிடாயை பார்த்து
ஈஸ்ரர் எப்போது வரும் என்று
ஏங்கியே கழிந்தது

எங்கள் தவக்காலம்
இயேசுவிலும் வாழ முடியவில்லை
இயேசுவுக்காகவும் வாழ முடியவில்லை

இயேசுவாகவும் வாழ முடியவில்லை
ஏழை விதவையின் காணிக்கையை
ஏற்றுக் கொண்ட ஏசு பிரான்
மற்றவர் காணிக்கையை
ஏற்க மறுத்ததன்
காரணம் கண்டறிய
இறையியல் தேவையில்லை
நம் மனங்களே சொல்லும் அர்த்தம்

யேசு தன் சிலுவை சுமக்கவில்லை
பிறர் சிலுவை சுமந்து நின்றார்
நாம் எம் சிலுவையும் சுமக்கவில்லை
பிறர் சிலுவையும் சுமக்கவில்லை
இயேசுவில் சிலுவை சுமத்துகிறோம்
பிறரிலும் சிலுவை சுமத்துகிறோம்

நச்சு உயிரியின் தாக்கத்தில்
நசுங்கி நசுங்கி
நலிவுற்று போனாலும்
நம்நிலை உணராது
நன்னடை போடுகிறோம்

வெரோணிக்கம்மாளாக எம்மால்
வாழ முடியாது விடினும்
அவள் இயேசுவின் முகம் துடைத்த
சீலைத் துணியாகவேனும்
வாழ முயற்சிப்போம்

சிலுவைகள் சுமப்போம்
மரத்தாலும் வெள்ளியாலும் அல்ல
பிறர் தேவை என்னும்
சிலுவை சுமந்து
சுயநலத்தை கல்லறையில் அடக்கி
மூன்றாம் நாள் அல்ல
ஒவ்வொரு நாளும்
உயிர்த்தெழுவோம்
மனிதர்களாக அன்றி
இயேசுக்களாக ...........

இ.இ. வசீகரன்
ஆசிரியர்

## உண்மை அன்பின் வடிவாக ...



பாவச்சேற்றில் வீழ்ந்த மனிதனை மீட்க
பாடுகள் ஏற்றார் பரமன் இயேசு
பாவங்கள் பெருகிவிட இன்னும் மீண்டும்
பாலகனாய் பிறப்பாரா மரிமகன் இயேசு

வேஷமான பாசங்களும் போலியான அன்பும்
வேலியே பயிரை மேய்ந்திடும் அநியாயமும்
வேதங்கள் உரைப்பது வார்த்தையில் மட்டுமென
வேடங்கள் போட்டிங்கு நாடகமான வாழ்க்கையும்

அன்பென்ற போர்வையில் ஆசையைத் தீர்ப்போரும்
அடுத்தவரை வீழ்த்தித் தம்தேவையைத் தீர்ப்போரும்
அகிலத்தில் ஆடிடும் ஆட்டமும் ஒருநாள்
அடங்கிடும் இறைமகனின் நீதியான தீர்ப்பினால்

உயிரையே கொடுத்திட்ட உண்மை அன்பு
உன்னையும் என்னையும் இரட்சித்த அன்பு
உலகாளும் இறைமகனின் உதாரணமான அன்பு
உண்மையாக உயிர்ப்பான உயர்ந்த அன்பு

சில்லையூர் ரமணி

## இளையோர் காவியம்

இயேசுவின்
குருதி வெள்ளத்தில்
மூழ்கிச்செத்துப் போனது
பாவங்கள்

உலகம்
அழுகிற அளவுக்கு
மரிமாறப்பட்டது கடவுளின்
அன்பு

நீ
வெறுக்கப்பட்ட சாலைகளில்
எழுதப்பட்ட முகவரிகளைத்
தேடு

உன்
அன்பு வீட்டில்
நிரம்பி வழியட்டும்
மனிதம்

நீ
மாற்றுகிற ஆடைபோல்
இருக்கக் கூடாது
அன்பு

எப்பவும்
மாற்றம் இல்லாத அன்பில்
எழுவதில்லை
நாற்றம்

காற்று
அடிக்குமா என்று
கண்ணீர் துளிகளோடு வழிபார்த்து
நிற்க
சில
காற்றுகள் அடிப்பது போல
புயலாய் வீசிவிட்டுப்
போகிறது

பல
விரல்கள் கண்ணீரைத்
துடைத்திருந்தாலும்
முகத்தில் நகங்கள் கீறிய
காயங்கள்

தூக்கி
விட்டிருக்கிறார்கள்
பார்த்தால் தயாரா இருந்தது
அடுத்த படு குழி

கொறோன ா
வந்து விட்டது என்று
மனிதர்கள் தூக்கி வீசப்பட்ட
வீதம்
அப்போது
ஒரு அனுதாபம் கூட இல்லாமல்
கிழிந்து போனது
முகமூடிகள்



பாவங்களின்
அழைப்பிதழ் வருகிறது
சாபங்களின் வடிவாக
வீட்டுக்கு

கடவுள்
எல்லோரிடமும் எதிர்பார்ப்பது
சாயம் பூசப்படாத
அன்பு

உயிரோவியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காவலன் கலசம்

## ஈஸ்டர் சிறப்பிதழ்

### மறுபடியும் நடப்போம்

விசுவாசம் இறையச்சம்
பிறரன்பு பரிவுள்ளம்
இல்லாத இவ்வுலகில்
நாமும் தினமும்
சிலுவைகளைச் சுமக்கின்றோம்
உயிர்ப்பு நிகழவில்லை
ஏங்கியே விம்முகின்றோம்
சிலுவை சுமக்கும் வழியில்
சீமோனைக் காணவில்லையென
சீற்றத்தோடு தேடுகின்றோம்
சீமோனாக மாறிட நாம் முடியாததால்
வெரோணிக்கம்மாளை காணவில்லையே
என ஏங்கியே தவிக்கின்றோம்
நம்மால் பிறரது திருமுகம் துடைக்க
முடியாதவர்களாகவுள்ளதால்
இயேசுவின் சிலுவை மரணம் உயிர்ப்பு
மனுக்குலத்தின் பாவ வாழ்விற்கு
ஒளிவிளக்கு - எம் புதைகுழிகள்
வெறுமையாக புதையுண்ட விசுவாசம்
புத்துயிர் பெற்றெழ
மறுபடியம் எழுந்து நடக்க
முயற்சிப்போம் இயேசுவைப்போல்

சேரழுபன் ஷெர்வின்
மல்வம், உடுவில்

### பாவம் போக்க உயிர்த்தெழுந்தார்

கடவுள் படைத்தார் ஆதாமை
பார் இது உனக்குத்தான் என்றார்
பின்பு பாவம் செய்யாதே என்றார்
பார் கனத்தது பாவத்தால்
பாவங்கள் களையப்
பரமனைப் ப்பாருக்கு அனுப்பினார்
பரிசேயர், சதுசேயர்
சட்ட வல்லுநர்களின்
பல பொறிமுறைச்
சிந்தனைகளுக்குள்
பரமனைச் சிறைப்படுத்தி,
சிலுவையில் தொங்க விட்டனர்
பரமனோ, மரித்துயிர்த்தார்
மூன்றாம் நாள்
மீண்டும் பாவங்கள்
களையப்படுவதற்கு

J.யோய் பேர்சி
சுன்னாகம்



### உயிர்ப்பு

மனம் மாறுங்கள் - இது
மனுமகன் வார்த்தை
மனித மனங்களிலே
மலிந்து கிடப்பவை
மக்கிய குப்பைகள்
அடுத்தவன் வாழ்க்கைக்கு
"ஆப்பு" வைத்தவன்
வட்டிப் பணத்தில்
வயிறு வளர்ப்பவன்
போதை உலகில்
போகமாய் வாழ்பவன்
கொலைக் கலாசாரத்தை
கொள்கையாய்க் கொண்டவன்
மனிதம் மறந்த
மாபெரும் பாவிகள் இவர்கள்
யாரும்
மரித்த பின் உயிர்ப்பாரா?
ஒவ்வொரு உயிர்ப்பும் - எம்
வாழ்வை மாற்ற வேண்டும்
அப்போதான் நாமும்
உயிர்ப்போம்

மனுமகன் யேசு
மக்களுக்கு உணர்த்தினார்
யேசுவின் உயிர்ப்பு - நம்
விசுவாசத்தின் ஆணிவேர்

கல்லறைகள் கதைகள் சொன்னால்
காவியமே எழுதிடலாம்
உலகில் ஓர் கல்லறைதான்
காலியான கல்லறை
யேசுவின் உடலற்ற கல்லறைதான்
உலகம் போற்றும்
ஒப்பற்ற கல்லறை

விதை மடிந்தது - புதுச்
செடி வளர்ந்தது
மனுக்குலம் மீட்க
தன்னையே பலியாக்கி
மூன்றாம் நாளில் உயிர்த்த - அந்த
உத்தமன் யேசுவின்
அற்புத செயலே - நம்
நம்பிக்கையின் நாற்று.

### உன்னை உய்விக்க உயிர்த்து விடார்



கல்வாரி நெடும் பாதையில்
தள்ளாடித் தரை வீழ்ந்தும் இயேசு
எம் கல் மனங்கள் உருகுகிடவே
காவியப் பயணத்தைத் தொடர்ந்தார்.

கற்கள் நிறைந்த பாதைதனிலே
கர்த்தர் கால்கள் வலித்திடவே
முத்து முத்தான உதிரம் பூமியை
சொட்டுச்சொட்டாய் நிறைந்ததுவே

ஓரவிழிப் பார்வையிலே
தாய் தன் மகனைச் சந்திக்க
ஈழவிழிகளில் நீர் சொரிய
விடைபெற இதயங்கள் மறுக்கின்றன

சீமோனும் வெரோணிக்காவும்
காலத்தின் கோலத்தில் காணாமற் போனதால்
தினமும் தேடியே அலைகின்றோம்
எம் சிலுவையைச் சுமத்திவிட

ஆறுதல் கூறவந்த ஜெருசலேம் மகளிரை
கூவியே நாம் அழைத்தும்
இங்கு ஓடியே வரவில்லை
எம் ஓலங்கள் ஓயவில்லை

மும்முறை விழுந்தும் இயேசு
முடங்கியே விடவில்லையே
உன்னையே உய்விக்கவே
உத்தமனாய் உயிர்த்துவிட்டார்

சேரளுபன் அருள்மதி
மல்வம், உடுவில்

### ஆணிவேரற்ற எம் வாழ்வு செழிக்க

இயேசுவின் சிலுவை
மரணம், உயிர்ப்பு
மனுக்குலத்தின்
பாவவாழ்வின் விடிவெள்ளி
விசுவாசம் பிறரன்பு
விடைபெற்று
நாம் சிலுஅைல்ல
சிலுவைகளைச் சுமக்கிறோம்
சீமோனும் வெரோணிக்காவும்
காலக் கொடுமையால்
காணாமல் போனதால்
இன்று நிர்க்கதியாக நிற்கிறோம்
உயிர்ப்பு நிகழ்வல்ல
மனித உயிர் ஊட்டத்தின்
அடித்தளம்.
கொள்ளையும் கொலையும்
வன்புணர்வும் போதையும்
இயற்கை அனர்த்தங்கள்
செயற்கை அனர்த்தங்கள்
நம்மில் நிழலாடுகிறது
புனித யோசவ்வாஸ்
விதைத்த விசுவாசம்
புதைகுழிக்குள்
புதையுண்டால்
மூன்று முறையல்ல
மூவாயிரம்
முறை விழுந்தாலும்
ஆச்சரியமேதுமில்லை
நமக்குள் கட்டிய
கல்லறைகளை
அர்த்தராத்திரியில்
வெறுமையாக்கி
ஆண்டவருடன் ஆண்டவரில்
உயிர்ப்போம்

S.அனிஸ்லாஸ்
புனித மடுத்தீனார் குருமடம்

### அந்தக் கணம்...

சீடர்களோடு இயேசு
ஒலிவ மலைக்குச் சென்றார்.
இன்றிரவே,
நீங்கள் என்னைக் குறித்து
இடறல் படுவீர்கள்.

மேய்ப்பனை வெட்டியபின்
மந்தைகள் சிதறடிக்கப்படும்
என்றார்.

மரத்தை முறித்துவிட்டால்
பறவைகள்
பறந்துவிடும் என்பதை
இயேசு அறியாதவரா ?

பேதுரு வருந்தினார்.
யார் உம்மை மறுதலித்தாலும்
நான் மாட்டேன்
மெசியாவே என்றார்.

இயேசு சிரித்தார்,
இன்று இரவு
சேவலின் சத்தம் கேட்கும் முன்
மும்முறை நீ
என்னை மறுதலிப்பாய்
என்றார்.

பேதுருவோ,இல்லை
இயேசுவே
சாவதென்றாலும் அது
உம்மோடுதான் என்று
முன்மொழிந்தார்.
சீடர் அனைவரும்
அதை வழிமொழிந்தனர்.

பின்னர் இயேசு
கெத்சமெனித் தோட்டம் வந்தார்.
பேதுரு,யாக்கோபு,யோவான்
அவரோடு இருந்தனர்.

இறப்புக்கு முந்தைய இரவின்
வேதனையில் இயேசு செபித்தார்.

தந்தையே முடியுமெனில்
இந்த வலி மடிந்து போகட்டும்.
ஆயினும்,என் விருப்பம்
முக்கியமன்று
உம் விருப்பமே என் பாக்கியம்.

இறைசித்தத்தில் வாழும்
மனிதராய்
வேதனையில் விசுவாசம் கொண்டு
ஜெத்சமனித் தோட்டத்தின்
அந்தக் கணத்தை
இந்தக் கணம் நினைத்தால்
கொரோனாக் கணம்
தொலைந்திடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலன் கலசம்

# இராப்போசனம் முதல் கல்வாரி வரை

# இயேசுவின் மனநிலையும் கிறிஸ்தவனின் உயிர்ப்பும்

மனநிலையென்பது, உணர்வுகள், தனிமனித விருப்பு - வெறுப்புக்கள், பார்வைக் கோணங்கள், சூழலின் தாக்கங்கள், விழுமியங்கள், பெற்றோரின் மரபணுப் பாதிப்புக்கள் மற்றும் இலட்சியங்கள் - இவற்றால் பின்னப்பட்ட ஒரு மனிதனின் உள்மன அமைப்பே ஆகும். இயேசுவின் மனநிலையும் இதற்கு விதிவிலக்கல்ல. இராப்போசனம் முதல் கல்வாரிவரை இயேசுவின் மனநிலை - அதாவது உள்மன அமைப்பு எப்படி இருந்திருக்கும்? அந்த மனநிலையை இரண்டு தளங்களிலே நாம் நோக்கமுடியும்.

1. உணர்வு சார்ந்தவை
2. இலட்சியம் சார்ந்தவை

இராப்போசனமும் கல்வாரிப் பாதையும் இயேசுவின் உணர்வுப் பிளம்புகளால் நிரம்பியவை. அதன் கொலுமுடியே சிலுவைப் பலி. ஏனெனில் "அவர் பாவம் தவிர மற்ற அனைத்திலும் நம்மைப்போன்ற ஒருவரானார்" என்கிறது வேதம்.



அருட்பணி. சி.அ. அருட்செல்வன்

**இராப்போசனம்**

இராப்போசன இரவின் காட்டிக்கொடுப்பு ஏற்படுத்திய வலியும் பின்னிரவில் மறுதலிப்பு விட்டுச்சென்ற நெருடலும் எத்துணை வலிமிகுந்ததாய் இருந்திருக்கும்? அதுவும் நெருக்கமானவர்கள், பழக்கமானவர்கள், நம்பியவர்கள், உதவிபெற்றவர்களின் மறுதலிப்பு சற்று வேதனை மிகுந்தவையே. காற்றும் ஊசியாய் குத்திய வலியுடன் அப்பத்தைப் பிட்டிருப்பார். நன்றி மறந்த மனிதத்தின் உச்சக் கட்ட கைவிரிப்பை - சுயநலத்தை எண்ணி மனம் வெந்து உருகியிருப்பாரோ? தோற்றுப் போகும் தனது மூன்றாண்டுப் பணியை நினைத்தும், ஏற்கப்போகும் சிலுவை, முள்முடி, ஆணிகொண்ட காயங்களை நினைத்தும் மனம் ஆழ் துயர் அடைந்திருக்கும் என்பது நிதர்சனமான உண்மையே.

ஆனால் "தந்தையே இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் என்பேனோ? இதற்காகத்தானே இந்நேரம் வரை காத்திருந்தேன்" (யோவா. 12:28) என்ற இயேசுவின் பக்குவப்பட்ட வீரம் செறிந்த வார்த்தைகளில் வெளிப்பட்ட மனநிலை, அவரின் இலட்சியக் கூர்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

**நற்கருணை**

இலட்சிய மனநிலைத் தளத்தின்மீது ஏற்படுத்தப்பட்டதுதான் நற்கருணை. அதன் செயல் நீட்சியாய் உருவானதுதான் குருத்துவம். "ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகள் அவரின் ஆத்மாவின் பிரதி விம்பமாகக் காட்சிதருகிறது. நற்கருணை என்னும் உயிலை இயேசு எழுதக் காரணமாய் அமைந்ததும் இந்த மனநிலையே. இவ்வாறு குருத்துவத்தின் முப்பெரும் பணிகளின் சாளரம் இங்கே திறக்கிறது.

**ஜெஸ்தமனி**

கல்வாரிப்பாதைக்கு மெல்ல நகர்கிறார் இயேசு. ஜெஸ்தமனித் தோட்டம் - இரத்த வியர்வைத் துளிகளால் ஈரமாகிறது. மீண்டும் இனம்புரியாத ஒரு பயம். உறக்கமற்ற முன்னிரவின் சலனமான மனநிலை. ஆழ் மனக்குழப்பத்திற்கு அங்கு பஞ்சமில்லை. துடிதுடித்துப்போகிறார். பதைபதைக்கிறார். எந்த அளவுக்கு அது என்றால் - தன் மனுவுரு ஏற்றலின்போதே நெஞ்சில் சுமந்து வந்த இலட்சியக் கனவாகிய "துன்பக்கிண்ணத்தை" நீக்கும்படி தந்தையிடம் வேண்டுமளவுக்கு அவரின் மனநிலை ஆர்ப்பரித்துக் கரைபுரண்டது. "தந்தையே இத்துன்பக்கிண்ணம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்.." என்ற ஏக்கத்தொனி, ஜெஸ்தமனியின் இரவுக்காற்றோடு கலந்துகொள்கிறது. ஆம்! திசைமாறக்கூடிய ஓர் புள்ளியிது. அவரின் மனநிலை வெறும் உணர்வுகளுக்கு - சுய விருப்பு வெறுப்புகளுக்கு மட்டும் ஆட்பட்டிருந்தால்! அதுதான் இல்லையே! " எனினும் எனது விருப்பப்படியன்று, உமது விருப்பப்படியே ஆகட்டும்" என்ற நித்திய வார்த்தைகள் இரட்சணிய வரலாற்றை முன்நகர்த்துகின்றன.

**கைது**

சீடர்கள் இன்னும் உறங்கி ஓய்வெடுப்பது இயேசுவின் தனிமையை அதிகரிக்கச் செய்கின்றது. ஆறுதல் தேடி அலைகிறார். வீதியெங்கும் தனிமை கொட்டிக் கிடக்கிறது. அந்த நேரத்தில் இருளைக் கிழித்துக்கொண்டு தீப்பந்தங்கள் - வாள்கள் சகிதம் சிலமனிதர்கள். குருதியே உறையும் அச்சம் தழுவிய மனநிலை. ஓடவும் முடியாது ஒதுங்கவும் முடியாது. இதை முகங்கொடுத்துத்தான் ஆகவேண்டும். வேடிக்கை என்னவென்றால், அக்குழுவுக்குத் தலைமை தாங்குபவன் என்னோடு உண்டவனே! மனிதத்தின் நன்றியறிதல் இவ்வளவுதானா? என்பார் இயேசு.

**சிலுவைப்பாதை**

தோளை அழுத்தும் சிலுவையுடன் நெருக்கமாகிறார் இயேசு. சிலுவைப்பாரம். அதனினும் மேலாய் மனதின் பாரம். வீழ்ச்சியும் மனித நாவு உச்சரித்த தூஷண வார்த்தைகளும் மாசற்ற துயரமாய் இருதயத்தில் படிந்திருந்தது. கசையடிகள் கீறிக்கிழித்த துவாரங்களில் பெருகிய இரத்தம், பெரும் துயரினும் பெரியதாய் இருந்தது. எனினும் சிலுவையைத் தாமே சுமந்து செல்லும் மனத்துணிவும் வீரமும் வரமாய் கிடைக்கப்பெற்றார் இயேசு.

**அம்மாவின் சந்திப்பு**

நெஞ்சின் மையத்தில் யாருமறியாத ஓர் அமைதி வீசத்தொடங்குகிறது. தாயின் உடனிருப்பை இயேசு பருகுகிறார். சுட்டெரிக்கும் வெயிலின் நடுவே ஒரு குளிர் நிலவாய் அவர் தன்தாயை உணர்கிறார். அகல விரிந்து. இருவரின் கண்களும் சந்தித்துக்கொள்கின்றன. தாய் - பிள்ளை பாசம் நேசம் ஒருபுறம் இளையோடினாலும் - இலட்சியதாகம் கொண்ட இயேசுவின் மனநிலை சற்று வைராக்கியம் காண்கிறது. மரியாளும் அப்படித்தான்!

கொல்கொத்தா மலையின் கோரத்தாண்டவம் நினைவில் மலர, மீண்டும் ஒரு திகில் மனநிலைக்குத் தள்ளப்படுகிறார் ,யேசு.

பூமிக்குச் சமாந்தரமாய் கிடந்த சிலுவையில் இயேசு பரப்பப்பட்டபோது ஆணி - சுத்தியலை, கொலைஞர்களின் குரூரப் பார்வையைக் கண்டபோது - ஏன் கை கால்களை நீண்ட இரும்பாணிகள் துளைத்தபோது, வார்த்தைகளற்ற வலியைக்கொண்டிருந்தார் ,யேசு.

**சிலுவையில் தொங்குதல்**

வானுக்கும் மண்ணுக்குமிடையே ஒற்றை மரத்தில் தொங்குகிறார். கை நெகிழப்பட்ட மன நிலை. திக்திக் நிமிடங்கள்.. உயிர் பிரியும் நேரம். தாகமாகிறார். மானிட மீட்சித்தாகத்தைக் கடற்பஞ்சின் காடி தீர்க்கமுடியுமோ? மறுபடியும் தவறாகப் புரிந்துகொள்கிறது இந்த உலகம் எனக் கவலைகொள்கிறார்.

இறுதியாய் மன்னிப்பில் ஈரமாகிறது இயேசுவின் மனநிலை. "தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" என்பது ஒரு சராசரி மனிதனின் ஒரு வார்த்தைச் சொல்லாடலாக இருக்கமுடியாது. நிபந்தனைகளற்று பேரன்புகொண்டு நேசிக்கும் ஒரு இதயத்தின் ஓசையாய் மட்டுமே அது இருக்கமுடியும். சிலுவையில் பலியாகும்போது இயேசுவின் மனநிலையும் அப்படியே.

"தன் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார்" இவ்வாறு தந்தை - மகனின் ஒரே மனநிலை இங்கு நிரூபணமாகிறது.

**கிறிஸ்தவனின் உயிர்ப்பு**

சாவு இருவகைப்படுகிறது. ஒன்று ஊனுடல் - ஆவி பிரிவுத் துயரம். அதாவது மரணம் என்னும் சூது கவ்வும் அந்த இறுதிநாள். அழுகை, புலம்பல், ஊர்கூடி அடக்கம் எல்லாம் இவ்வகை சாவில் அடங்கும். மற்றொன்று: உயிர் பிரியாது ஆனால் உணர்வுகள் இறந்திருக்கும் உறவுகள் ஒன்றுகூடிப் புலம்பாது ஆனால் உணர்வற்ற உடலோடு நடமாடித்திரிவர் இனி வாழ்ந்தென்ன இறந்தென்ன என்ற விரக்தியோடு - நம்பிக்கைச் சாவடைந்து, மகிழ்ச்சி தொலைந்து - ஆனால் உயிர் வாழ்ந்துகொண்டிருப்பர். இதையே நடைப்பிணம் என்கிறோம்.

மரணம் எப்படி இருவகையோ, அவ்வாறே ஒரு கிறிஸ்தவனுக்கு உயிர்ப்பும் இருவகைப்படுகிறது. ஒன்று: ஊனுடல் அழிந்த பின்னர், வானவர் எக்காளம் முழங்க உயிருடன் எழுப்பப்படும் அந்த இறுதிநாள். மற்றொன்று: வாழும்போதே உலகின் தீமைகளால் கவரப்பட்டு, உலகக் கவலைகளால் அலைக்களிக்கப்பட்டு, ஆன்மாவைப் பறிகொடுத்து வெறும் உணர்வுசார்ந்த பயம், விரக்தி, துன்பம், பாவ அடிமைத்தனங்களிலிருந்து உயிர்ப்பு - புதுவாழ்வு.

**இயேசுவின் இலட்சிய மனநிலையே ஒரே வழி**

இரண்டாவது வகை உயிர்ப்பை நாம் அடைய இயேசுவின் வீரம் மிக்க இலட்சிய தாகம் கொண்ட மனநிலையே ஒரே தீர்வாகும். நாம் வாழ்வில் கைநெகிழப்படுகிறோமா? ஆம் இயேசுவும் கைநெகிழப்பட்டாரே. நாம் காயப்படுகிறோமா? இயேசுவும் காயப்பட்டாரே! நாம் சிலுவை சுமக்கிறோமா? இயேசுவும் அவ்வாறே! நாம் துன்பங்களால் சாகிறோமா? இயேசுவும் சாவடைந்தார். இவ்வாறு அனைத்திலும் நம்மைப்போலாகி ஒன்றில் மட்டும் வேறுபடுகிறார். அது "தந்தையின் அன்பிற்காய் இவையனைத்தையும் ஏற்றுக்கொள்வதில்!" ஆதனால்தான் அவர்

## "இதை என் நினைவாகச் செய்யுங்கள்"

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" விவிலிய ஆசிரியர்கள் மனிதனுடைய கவனத்தை அவனுடைய ஆண்டவரை நோக்கி எழுப்ப முயற்சி எடுக்கிறார்கள்: "உன் ஆண்டவராகிய கடவுளை மறந்துவிடாதே" (இச 6:12). "என் மக்களே எனக்குச் செவிகொடுங்கள், எனக்குச் செவிமடுக்க பாட்டாயா?" (திபா 80:9). "என்னிடம் திரும்பி வா... " (எசா 44:22).

மனிதனுடைய பெரிய பிரச்சினை என்னவென்றால் இடையறாது தன் உவுளையும் அவர் செய்த நன்மைகளையும் 'மறந்துவிடுவது". ஓர் அபாரத் துணிச்சலோடு இறைவாக்கினர் ஓசேயா இறைவனுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையே உள்ள உறவைப் பிரமாணிக்கம் தவறிய மனைவிக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்: "அவள் தன் காதலர்களைப் பின்தொடர்ந்து ஓடுவாள்" கோதுமையும் திராட்சை இரசமும் எண்ணெயும் கொடுத்தது நானே என்பதை அவள் அறியவில்லை. நான் வாரி வழங்கிய பொன், வெள்ளியைக்கொண்டே இறைவனாகிய என்னை மறந்துபோனாள்!" (ஓசே 2:7-8). இயேசுவுக்கு மனிதனுக்குள் என்ன இருக்கிறது என்று தெரியும் (யோவா 2:25), நம்மிடம் ஒருகட்டளையாகக் கூறுகிறார்: "இதை என் நிவைாகச் செய்யுங்கள்" (லூக் 22:19).

"இது உங்களிடையே ஓர் உண்மையான பிரசன்னமாக இருக்க, அது உங்களிலும் நீங்கள் என்னிலும் கிறிஸ்துவாக உடல் எடுக்க நினைவாகச் செய்தல். இன்று நமக்குக் கிறிஸ்துவின் உண்மையான ஆற்றலுள்ள வார்த்தையாகவும் செயலாகவும் ஆகிறது. 'நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவா 20:28)

வசீகர நேரத்தில் நற்கருணையான அப்பத்தை நோக்கி நம் கண்களை உயர்த்துகிறோம். பிறகு கிண்ணத்தை நோக்கியும் உயர்த்துகிறோம். இவை உயர்த்திக் காட்டப்படும் ஒவ்வொரு முறையும் முகம் குப்புற விழுந்து ஆராதிக்கிறோம். இந்த நிலை தோமாவின் உள்ளத்திலிருந்து எழுந்த விசுவாச அறிக்கையைக் குறிக்கிறது. எல்லா மக்களும் காண சிலுவையில் அறையப்பட்டு இறந்த அவர் உயிரோடு பிரசன்னமாகப் பேசுபவராக கண்ணால் கண்ட திருத்தூதர் தோமா இடியால் தாக்குண்டவர் போலாகி தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொங்கி எழுந்த வார்த்தைகள் இவை (லூக் 23:35).

இந்த ஆழ்ந்த உறுதியான விசுவாச அறிக்கை வழியாக திருத்தூதர்களின் விசுவாசம் நம்மை வந்தடைந்துள்ளது. ஏற்கெனவே இது கீழ்த்திசை ஞானிகளின் ஆராதனையில் முன் குறிக்கப்பட்டுள்ளது."நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள் (மத் 2:11). [illegible] மனித உருவில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுகிறோம். இது விசுவாசத்தின் மறைபொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கலசம்

## புனித வார திரிதின வழிபாடுகள்

### ஆண்டவருடைய இரவு விருந்து

### (புனித வியாழன்)

இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்விலேநடந்தஇறுதிநிகழ்வின் ஆரம்பநாளினை நினைவுகூரும் நன்நாள். இயேசுவின் இறுதி உணவுஇருண்டுபோனஉலகிற்குஒளியாகவிளங்கும் ஒரு நிகழ்வு. பழைய ஏற்பாட்டு மக்கள் வருடம் தோறும் தவறாமல் பாஸ்கா விழாவைக் கொண்டாடியிருந்தாலும் இயேசுவின் புதிய பாஸ்கா நம் ஒவ்வொருவரையும் அவரோடு உடனிருக்க அழைக்கிறது. நம்மோடுகூட நம்பில் ஒருவராக வாழ்ந்த இறைமகன் இயேசு தம் அளவில்லா அன்பினை வெளிக்காட்ட என்றும் நம்மோடு உடன் இருக்க விரும்பி நமக்காக வழிவகுத்த மாபெரும் திட்டம் தான் நற்கருணை. நற்கருணை விருந்தில் கலந்து கொள்ளும் பொழுதெல்லாம் இயேசு மனித விடுதலைக்காகச் சிந்திய இரத்தத்தையும், தியாகத்தையும் நினைவு கூர்வோம். இறைமகன் இயேசு தமது தந்தையின் பணிதனை இவ்வுலகில் தொடரவும், தமது அன்பின் வாழ்வை திருச் சடங்குகளாகத் தொடர்ந்து பறைசாற்றிப் பணிபுரியவும் குருத்துவத்தை ஏற்படுத்தினார்.

இன்றைய நன்நாளிலே ஆயர்களுக்காக, நமது அருட்பணியாளர்களுக்காக சிறப்பாகச்செபிப் போம். குருத்துவம் காலத்தால் அழியாத கருணைக் காவியம். இயேசு தான் பணிவிடைபெற அல்ல மாறாகப் பணி புரியவே வந்தேன் என்று போதித்தவர். அந்தப் பணி வாழ்வின் உச்சக்கட்டமாக இன்று தமது சீடர்களின் பாதங்களை ஒரு பணியாளன் போலக் கழுவினார். அதைத்தான் இன்று நினைவு கூர்கின்றோம். இதை என் நினைவாகச் தொடர்ந்து செய்யுங்கள் என்று அழைப்பதன் மூலம் நமது பிறரன்புப் பணியிலே, சேவையிலே, பணிவாழ்விலே தமது வாழ்வைப் பகிர்வதிலே துன்பத்தால் வறுமையால் வாடும் மக்களுக்காக தமது வாழ்வை திறன்களை, செல்வங்களைப் பகிர்ந்து கொள்ளுகிறபோது இறைமகன் இயேசு தம்மையே வெளிப்படுத்துகின்றார். நம்மோடு கூடவே தொடர்ந்து வாழ்கிறார் என்பதைப் பறைசாற்றுகின்றோம்.

### ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

### (புனித வெள்ளி)

உலகம் வெளிச்சம் பெற இறைமகன் இயேசு தன்னைத் தீபமாக்கிக் கொண்ட தியாகத் திருநாள். மனிடரை மீட்கத் தன் உயிர் தந்த இயேசுவின் தியாகத்தை நினைவுகூரும் நாள். பாலைவனத்தில் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்து பாம்புக்கடியினால் இறந்தவர்கள் உயர்த்தப்பட்ட வெண்கலப்பாம்பைப்பார்த்து உயிர்பிழைத்தார்கள். அந்தமுன் அடையாளத்தின்படி விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே சிலுவையில் பலி செம்மறியாக உயர்த்தப்பட்டிருக்கிற இயேசுவைப் பார்க்க உலகம் அனைத்தும் இன்று அழைக்கப்படுகிறது.

அவமானத்தின் சின்னமான சிலுவை



அன்பின் சின்னமாக உருப்பெற்றது இயேசுவின் இறப்பிலேதான். இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் இயேசுவின் காயங்களை நினைத்து பாடுபட்ட சொரூபத்தை முத்தி செய்து ஆராதிக்கப் போகின்றோம். உலக மானித்தை மீட்க முனைந்தபோது காயங்கள் ஏற்பட்டன. சதுசேயர், பரிசேயர் போன்றோரின் இதயத்தில் எரிந்த பகைமை என்ற தீ யூதாசில் எரிந்த பணம் என்ற தீ, பாமர மக்கள் கூச்சலிட்ட அறியாமை என்ற தீயினால் இயேசு காயப்பட்டார். 'சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள்' என்று அழைத்தவரின் கரங்களில் ஆணி கள் 'நீதிமான்களையே அல்ல பாவிகளையே அளிக்க வந்தேன் என்றவரின் பாதங்களில் ஆணிகள்.

உலகமே ஒரு கல்வாரி. இங்கே சிலுவைச் சாவுகள் தினம் தினம் அரங்கேறுகின்றன. புனித வெள்ளியில் உண்ணா நோன்பும், மாமிசத் தவிர்ப்பும் கடைப்பிடிப்பது புண்ணியம்தான். பசித்திருப்போர்க்கு ஒருவேளை உணவிட்டால் புண்ணியத்திலும் புண்ணியம். வார்த்தை ஆணிகளால் பிறரை அறைவதை நிறுத்துவோம். பிறருக்கு சிலுவையாய் இருப்பதையும் தவிர்ப்போம்

### புனித இரவில் பாஸ்காத் திருவிழிப்பு

### (புனித சனி)

கிறிஸ்துவின் உயர்ப்பு நம் நம்பிக்கையின் உயிர்மூச்சு. எனவேதான் புனித பவுல் கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் நம் நம்பிக்கை வீண் என்றும், நம் கிறிஸ்தவ வாாழ்வு பொருளற்றதாகியிருக்கும் என்றும் கூறுகின்றார். உண்மை உறங்காது என் தனை உலகிற்குச் சொன்ன உத்தமர் இயேசு. சாவை வென்று மகில் விடுத்து வெளிக்கிளம்பும் முழுமதியென வெற்றி வீரராய் உயிருடன் எழுந்த வெற்றித் திருநாள். உயிர்த்த இயேசு கொண்டு வந்தது அமைதி(சமாதானம்) இந்த அமைதியின் தூதுவர்களாய் வாழ நம்மை அழைக்கின்றது.

இனிப் போர்க்களங்கள் வேண்டாம். அமைதி மாநாடு நடத்துவோம். உள்ளத்தில் பகை வேண்டாம். நெஞ்சத்தை உறவுகளின் உறைவிடமாக்குவோம். இயேசுவை மூலைக்கல்லாகக் கொண்டு இனியொரு புதுவிதி செய்வோம். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவோம். இருள் விலகட்டும், விலகாமல் போகட்டும். விளக்கேற்றுவதை மாத்திரம் விரல்கள் விட்டுவிடவேண்டாம். இயேசுவின் உயிர்ப்புப் பெருநாளில் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விளக்கேற்றுவோம். விடியலை நமதாக்குவோம். உயிர்த்த கிறிஸ்துவின் இறை அனுபவத்தை ஒவ்வொரு அன்பியமும் தமதாக்கிக் கொண்டு உயிர்ப்பின் மக்களாக வாழ்வோம்.

### பாஸ்கா ஞாயிறு

கிறிஸ்தவ நம்பிக்கையும் ,எதிர்நோக்கும் (விசுவாசம்) இயேசுவின் உயிர்ப்பிலேதான் கட்டப்பட்டுள்ளது. இயேசுவின் உயிர்ப்புத்தான் பயந்து ·நடுங்கி நான்கு சுவர்களுக்குள் தங்களை அடைத்துக் கொண்ட திருத்தூதர்களின் பயத்தை அறுத்து, துணிச்சலோடு பலருக்கு நற்செய்தியை எடுத்துக் செல்லச் செய்தது. இறக்காதவர்கள் உயிர்க்கமாட்டார்கள். ஆனால் இறக்கிற அனைவருமே உயிர்ப்பதில்லை. புனித பவுல் அடிகளார் கூறுவதைப்போல் இயேசுவோடு இறக்கின்ற அனைவருமே உயிர்த்தெழுவார்கள். (உரோ. 6:5) இயேசு பிறப்பு முதல் இறப்பு வரை ஏழை மக்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். அழிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் நல்வாழ்விற்காக தன்னையும், தன் வாழ்வையும் தாரை வார்த்தார். சமூகத்தை அடிமைப்படுத்துகின்ற தீய சக்திகளை அடையாளம் கண்டு, அவற்றிற்கு சாவுமணி அடிக்க முயற்சி செய்தார். தன் வாழ்வின் தடைகளையெல்லாம் படிக்கற்களாக்கிப் பயணித்த இயேசுவின் போராட்ட வாழ்வின் மகிழ்வு உயிர்ப்பு வாழ்வு.

இயேசுவின் உயிர்ப்பு நம் வாழ்க்கையிலும் மாற்றம் கொண்டுவரவேண்டும். நம் குடும்ப வாழ்வில் குழும வாழ்வில் ஒற்றுமையையும், மகிழ்ச்சியையும் உறவையும் நிம்மதியையும் சீரழித்துக் கொண்டிருக்கும் தீய சக்திகளை அடையாளம் கண்டு அவற்றிற்குக் கல்லறை கட்டுவோம். சமூக வாழ்வில் பொறாமை, ஆணவம், வீண்பேச்சு, ஏற்றத்தாழ்வு, பணம் போன்றவை நம்மைப் பிறரிடமிருந்து பிரித்து அன்னியராக்கப்பட்டிருந்தால், அந்நியத்திற்கு இறப்போம் சமத்துவத்துடன் அனைவருக்கும் வாழ்வளிக்க உயிர்ப்போம். உயிர்ப்பின் மனிதன் உண் மையான இயேசு பணியாளன் தனக்காக வாழ்பவன் கல்லறையின் உள்ளே முடங்கி விடுவான். பிறருக்காக இறப்பவன் வாழ்வான். ஆம் மனிதர்களின் உள்ளத்தில் வாழ்வாக உயிர்ப்பான். அப்படிப்பட்ட மனிதர்களாக வாழ உயிர்த்த இயேசு இன்று நம்மை அழைக்கின்றார்.

**திரு.ஆ.மரியநாயகம்**

# அன்பும் பாவமும்

பழைய ஏற்பாட்டிலே இறை கட்டளையை மீறுதல் பாவமாகக் கருதப்பட்டது. வேற்றுத்தெய்வ வழிபாடு பாவங்களிலேயே மிகப்பெரிய பாவமாக விளங்கியது. இறைவாக்கினர்கள் மக்களை வேற்றுத்தெய்வ வழிபாட்டில் இருந்து வெளியே கொண்டுவருவதற்கு மிகவும் கடினப்பட்டார்கள். இதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டது. எப்போது இயேசு மக்களின் பார்வைக்கு வந்தாரோ, அப்பொழுது வேற்றுத்தெய்வ வழிபாடு பெரிதும் மறைந்து மக்கள் யாவே இறைவனை மீண்டும் வழிபட ஆரம்பித்தார்கள் எனலாம்.

பரிசேயரது எண்ணங்களே திருச்சட்டங்களாகவும் மக்கள் அந்தச் சட்டங்களுக்கு அடிமைகளாகவும் இருப்பதை ஆண்டவர் இயேசு கண்ணோக்கினார். ஆனால் சட்டத்தை விட அயலவர் மட்டிலான அன்பும், நீதியும் ஆண்டவர் பார்வையிலே மேலானதாக விளங்கியது. இதனால் தான் ஆண்டவர் இயேசு பரிசேயரையும் சதுசேயரையும் " நீங்கள் வெளிவேடக்காரர்கள்" என்று வெளிப்படையாகக் கடிந்து கொண்டார். சட்டங்களுக்கும், சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் உரிய இடம் ஆண்டவர் இயேசுவால் வழங்கப்பட்ட போதும் கூட அவர் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், சட்டங்களையும் விட அன்பையும், நீதியையும், இரக்கத்தையும் மேலாக நோக்கினார்.

இதனால் இயேசு பாவத்திற்கு ஒரு புதிய வரைவிலக்கணத்தைக் கொடுத்தார். அவருடைய போதனையின் படி அன்பிற்கு எதிரான எச்செயலும் பாவம் என்றார். கல்லின் மேல் எழுதப்பட்ட கட்டளைகளை ஆண்டவர் மனித உள்ளங்களிலே புதுப்பித்தார்.

**அருட்சகோ. வி.ஜெ.யேசுதாஸ்**



தனது புதிய கட்டளையிலே சட்டங்களை விட அன்பிற்கு முன்னுரிமை கொடுத்தார். சீனாய் மலையில் இறைவன் கொடுத்த பத்துக்கட்டளைகளை தன்னுடைய அன்பின் இருகட்டளைக்குள் அடக்கினார். அனைத்திலும் முதன்மையான கட்டளை எது என்று கேட்ட மறைநூல் அறிஞருக்கு இயேசு அளித்த பதில் - " இஸ்ரயேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே. உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக, என்பது முதன்மையான கட்டளை. உன்மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக. என்பது இரண்டாவது கட்டளை. இவற்றை விட மேலான கட்டளை எதுவும் இல்லை" (மாற்கு 12:29-31) என்றார்.இறை அன்பு மற்றும் பிறரன்பு ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் தன் கட்டளைகளை விட மேலான கட்டளை எதுவும் இல்லை என்று சொன்னார். " தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்றார். அதையே தனது வாழ்விலும் வாழ்ந்து காட்டினார்.

அன்பர்களே புனித அகுஸ்தினார் தனது வாழ்வில் மொழிந்த அழகிய வரிகள் சில!

❖ நீ மௌனமாயிருந்தாலும், பேசினாலும், அடுத்தவரைத் திருத்தினாலும், மன்னித்தாலும் அன்பே உன்னில் வேரூன்றியிருக்கட்டும். அந்த வேரிலிருந்து நன்மை மட்டுமே வளரும். அன்பு செய் பின்பு நீ விரும்புவதை எல்லாம் செய்.

❖ பயம் தான் அன்பின் முதல் எதிரி.

❖ நாம் எந்த அழவிற்கு அன்பு செய்கின்றோமோ அந்த அளவிற்கு நம் அழகு வளர்கின்றது. ஏனெனில் அன்பு என்பது ஆன்மாவின் அழகு.

❖ மக்களின் ஏக்கங்களையும் துன்பங்களையும் கேட்கும் காதுகள் அன்பிற்கு உண்டு.

❖ கடவுளிடம் அன்பு கூர்வதே மிகப்பெரிய காதல்.

எனவே முதலில் அன்பு செய்யுங்கள். பின்னர் நீங்கள் விரும்புவதை எல்லாம் செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கலசம்

# முத்தம்



# துரோகம்

என்ன இது தலைப்பு தவக்காலம் என்பதையும், இது கிறிஸ்தவ பத்திரிகை என்பதையும் மறந்து எழுதப்பட்டு இருக்கிறது என்ற எண்ணம் உங்கள் மனங்களில் எழுவதை நான் உணர்கிறேன். இது காமங்களோடு கதைபேசி விடை கொடுக்கப்படும் முத்தம் பற்றி நான் பேசவரவில்லை. மாறாக துரோகத்தின் முத்தம் பற்றிப் பேசப்போகிறேன். துரோகத்தின் முத்தம் என்கிறபோதே நான் எதைப்பற்றி இங்கு சொல்லப் போகிறேன் என்பது உங்கள் சிந்தனைகளில் சிறிதாக பிரகாசித்து இருக்கும். ஆம் அதே விடயம் தான் இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் ஸ்கரியோத்து காட்டிக்கொடுக்கக் கையாண்ட அந்த முத்தத்தைப் பற்றித் தான் இங்கு பேசப்போகிறேன்.

முத்தம் என்பது அடிப்படை உணர்வின் வெளிப்பாடாகவே காணப்படுகிறது. முத்தம் ஒரு தனிமனித வாழ்வின் ஆரம்ப அஸ்திவாரமாகக் கிடைக்கப் பெறுதல் வேண்டும் என்பது உளவியல் அறிஞர்களின் கருத்தாகும். தாயின் அன்பும், தந்தையின் அரவணைப்பும் குழந்தைகளுக்கு கிடைக்கப்பெறுதல் என்பது இந்த முத்தத்தின் வாயிலாகவே. ஆனால் இந்த முத்தம் நவீனத்துவ வளர்ச்சியில் எவ்வாறு மாற்றி அமைந்து போய் இருக்கிறது என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதைப்பற்றி இங்கு குறிப்பிடுவதற்கு முன் வேதாகம நோக்கோடு சில கருத்துக்களைப் பகிர்ந்ததன் பிற்பாடு நவீனத்துவ துரோகம் பற்றிச் சிந்திக்கலாம் என்று எண்ணுகிறேன்.

முத்தம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற எண்ணம் எம் சிந்தனைகளில் எழுந்தாலே முதலில் எமக்கு நினைவில் வருவது முப்பது வெள்ளிக் காசுகளுக்காக யூத தலைமைக் குருக்களிடமும், ரோம அதிகாரிகளிடமும் பாஸ்காப் பண்டிகை நேரத்தில் இயேசுக் கிறிஸ்துவை கன்னத்தில் முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த யூதாஸ்கரியோத்து தான் நினைவில் வந்து விடுகிறான். உண்மைதான், துரோகத்தின் முத்தமிட்டுக் குருவையே காட்டிக்கொடுத்த யூதாஸ் கிறிஸ்துவோடு உண்டு குடித்தவன், மறை போதகங்களில் அவரோடு பயணித்தவன், புதுமைகளில் கூட இருந்தவன். முப்பது வெள்ளிகளுக்காய் விலைபோய் விடுகிறான். மனுமகனுக்கே துரோகம் செய்து விடுகிறான்.

துரோகம் என்ற வார்த்தை இன்றைய எமது வாழ்க்கையில் எவ்வாறான பரிமாணத்தை அடைந்து இருக்கிறது என்பது வரலாறு என்றைக்கும் விட்டுச் செல்லும் பாடமாக இருக்கிறது. இருந்தாலும் வேதாகமும் துரோகமும் பற்றியும், துரோகம் இணைத்த மனிதர்கள் பற்றியும் குறிப்பிட மறந்து விடவில்லை. வேதாகமானது துரோகத்தின் மனிதருக்காகவும், நம்பிக்கை துரோகிகளாகவும் பலரை வெளிப்படுத்தி இருந்த போதிலும் மூவரைப் பற்றி இங்கு குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன். தெலினாள், அப்சலோம், யூதாஸ் ஸ்கரியோத்து ஆகிய மூவரையுமே குறிப்பிட்டு நோக்கத்தக்கதாய் வேதாகமம் வெளிப்படுத்துகிறது. இவர்களின் நம்பிக்கை துரோகங்கள் இவர்களைச் சார்ந்திருந்தவர்களை இன்னல் நிலைக்கு உள்ளாக்கி அவர்களின் வாழ்க்கையை சீர்குலைத்ததை நாம் சிந்திக்க வேண்டியதேவை இந்தத் தவக்காலத்திலாவது உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறேன்.

முதலாவதாய் வஞ்சகத் துரோகம் புரிந்த தெலீனாளைப் பற்றிச் சொல்ல முற்பட்டால் கடவுளுக்கு உண்மையாய் இருந்த சிம்சோனை தன் பொய்மை நிறைந்த காதலால் அவருடைய பலத்தின் ரகசியம் அறிந்து பெலிஸ்தரின் அதிபதிகளுக்கும் அதை வெளிப்படுத்தி துரோகம் செய்கிறாள். அன்பு என்ற உண்மைக்கு அவளின் இத்துரோகம் இன்றுவரை நினைவில் நிற்கிறது. அடுத்ததாக பதவி மோகத்தால் துரோகம் செய்த அப்சலோமைப் பற்றிப் பார்க்கப்போனால் தாவீது மன்னனின் அரியணையை அபகரிக்க வெறிபிடித்து பொய்யான வாக்குறுதிகளாலும், வஞ்சகமிகு நடிப்பினாலும் சுகித்தோப்பேலை வஞ்சகத்துக்கு நண்பனாக்கி எவ்வாறான துரோகத்தால் தாவீது மன்னனுக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் வஞ்சகம் விளைவித்தான் என்பதை வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது.

கிறிஸ்துவோடு கூடவே இருந்து துரோகத்தை விளைவித்த நயவஞ்சக யூதாஸ் பற்றிப் பார்க்கப் போனால் முப்பது வெள்ளிக் காசுகளுக்காய் இறதி உணவைக்கூட அவரோடு உண்டுவிட்டு கெத்சமனே தோட்டத்தில் வைத்து முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்கிறான். 'ராபி வாழ்க' என பொய்யான புகழாரத்தோடு முத்தமிடுகிறான். (மத் 26:46-50), லூக் 22:47-52) அன்பின் வெளிப்பாடாய் இருந்த முத்தத்தைத் துரோகத்தின் வடிவத்திற்கு யூதாஸ் பயன்படுத்தி நிற்கிறான்.

இந்த மோசமான உதாரணங்கள் எமக்கு நிறையப் பாடங்களை எம் வாழ்க்கைக்காக எமக்கு விட்டுச் சென்றாலும் இவர்களுக்கு நிகழ்ந்த கேவலமான முடிவுகள் எம் வாழ்க்கையின் பாடங்களாய் இருந்திடவேண்டும். அத்தோடு யூதாஸ் பற்றிய இறைவனின் வெளிப்பாடு 'ஐயோ அவரைக் காட்டிக் கொடுப்பவனுக்குகேடு" (லூக். 22:22) இவ்வாறு அமைந்து இருக்கிறது. மற்றைய பாவங்களுக்கு மன்னிப்பை வழங்கும் இறைமகன் யூதாசின் துரோகத்துக்கு வெளிப்படுத்தி இருக்கும் வார்த்தையானது துரோகம் என்னும் பாவ நிலைப்பாட்டையும், பாவத்தின் கொடூரத் தன்மையையும் வெளிப்படுத்தி நிற்கிறது. 'அவன் பிறக்காமல் இருந்திருந்தால் நலமாக இருந்திருக்கும்" (மாற்கு 14:21) என்று மாற்கு நற்

கீ.நித்தியானந்தா
யாழ்ப்பாணம்

செய்தியாளரும் துரோகத்தின் வெளிப்பாட்டை இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளார். மொத்தத்தில் துரோகம் என்ற பாவச் செயலுக்கு முத்தத்தை வடிவமாக்கிய யூதாசுக்கு மட்டும் இந்த வார்த்தைகள் வெளிப்படுத்தி நிற்கின்றனவா? இல்லை இன்றைய துரோகத்தின் பாவங்களைச் சற்று கூச்சம் இன்றிச் செய்யும் எமக்குப் பொருந்திடப் போகின்றனவா? என்ற கேள்விகளை எம் மனதில் கேட்டு நிற்போம்.

நாம் என்ன துரோகம் செய்கிறோம்? என்ற கேள்விகளை எம்மனதில் எழுப்பிக் கொண்டு நாம் எந்தத் துரோகத்தையும் யாருக்கும் செய்துவிடவில்லை என்ற பதிலையும் நாமே அளித்துவிட்டு நிற்கிறோம். துரோகம் என்ற வார்த்தையும் அதனுடைய பொருளும் எது என்பது கூட நாம் புரிந்துகொள்ளாமல் நடந்து கொண்டு இருக்கி றோம். அண்மையில் காதலர் தினம் அன்று நான் கண்ட காட்சிகள் சில இந்தத் துரோகத்தின் வெளிப்பாடாக இருந்திருந்தது என்பதை இங்கு கூற முற்படுகிறேன். எத்தனை எத்தனை காதலர்கள், தனிமையாக, மறைவாக.. அநாகரிய செயற்பாடுகளோடு காணப்பட்டமையை இங்கு சுட்டிக் காட்டுகிறேன். இவை எல்லாம் துரோகமா? அன்பின் வெளிப்பாடு தானே என்ற கேள்விகளை எழுப்பிவிடலாம். ஆனால் எம்மை வளர்த்த பெற்றோருக்கும் அவர்களுடைய நம்பிக்கைக்கும் நாம் செய்த செயல் துரோகம் ஆகாதா? என் மகள்/ மகன் படிக்கப் போகிறார்கள், வேலைக்குத் தான் போகிறார்கள் என்று நம்பி அனுப்பும் எம் பெற்றோருக்கு நாம் செய்வது துரோகம் ஆகாதா? எமது பண்பாடுகளுக்கும், கலாசாரங்களுக்கும் இது துரோகம் ஆகாதா?

துரோகம் என்றால் என்ன என்று அதற்குப் பொய்யான வடிவம் கொடுத்து விட்ட நாங்கள் இவற்றை எல்லாம் துரோகத்தின் பட்டியலில் சேர்த்து விடுவதில்லை. மாறாக முதுகில் குத்துதலையும் தட்டி வீழ்த்துவதையும் துரோகமாகவே கருதி விடுகிறோம். ஆனால் சிறிய சிறிய துரோகங்கள் மனித மனங்களைப் பாதிப்பிற்குள்ளாக்கி சின்னாபின்னமாக்கி விடுவதை நாம் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை. ஆனால் அவை துரோகம் தான் என்பதை நினைவில் இருத்தல் வேண்டும்.

நல்லவர்கள் என்று நம்பி எத்தனை வீடுகளில் நம்பிக்கையோடு உள்ளே அனுமதித்தவர்களுக்கு துரோகத்தைப் பரிசாக வழங்கி இருக்கிறோம். அவர்களின் மகிழ்ச்சிகளில் நஞ்சை விதைத்திருப்போம். நம்பியவர்களுக்கு மரணத்தைக்கூடப் பரிசாக அழித்த சம்பவங்கள் எத்தனை எத்தனை. இவை எல்லாம் துரோகம் என்ற பட்டியலுக்குள் சேர்க்கப்படாமல் நாமே மறைத்து விடுகிறோம்.

பெற்றோருக்குப் பிள்ளைகள், பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள், கணவனுக்கு மனைவி, மனைவிக்கு கணவன், காதலனுக்குக் காதலி, காதலிக்குக் காதலன், ஆசிரியர்களுக்கு மாணவர்கள், நண்பனுக்கு நண்பன், இயற்கைக்கு மனிதன், இறைவனுக்கு நாம்.. என்று நீண்டு செல்லும் இந்த விடயங்கள் அனைத்தும் துரோகத்தில் தான் சேரப் போகின்றன.

சற்றுச் சிந்திப்போம் அன்பின் வெளிப்பாடாய் இருந்த முத்தத்தை துரோகத்தின் வெளிப்பாடாக்கிய யூதாஸ் போன்று அன்பின் முத்தத்துக்கு காமத்தின் வடிவம் கொடுத்து கருக்கொலைகளுக்கும், கற்பழிப்புக்களுக்கும் தீனி போட்டுள்ளோம். இவையும் யூதாசின் முத்தத்திற்கு ஒப்பானது அல்லவா?

இப்படியான துரோகத்தின் வெளிப்பாடுகளில் கிறிஸ்துவும் அவள் பிறவாதிருந்தால் நலமாக இருந்திருக்கும் என்ற வார்த்தையைத்தான் எம் துரோகங்களின் போதும் வெளிப்படுத்தப் போகிறார். யூதாஸ் ஆம் என்று சொன்னதால்தான் சாத்தானும் யூதாசுக்குள் புகுந்து துரோகத்தால் கிறிஸ்துவை காட்டிக் கொடுக்கிறான். யூதாஸ் சாத்தான் புக மறுத்திருந்தால், ஆம் அதேபோல் நாமும் எம்மில் சாத்தான் புக காத்திருக்கிறான். அதற்கு மறுப்புத் தெரிவிக்கப் போகிறோமா? இல்லை. ஆம் எனப் பதில் கூறி அனுமதிக்கப் போகிறோமா? இல்லை இயேசுவின் பாதையில் துன்பங்களைக் கிறிஸ்துவுக்காக ஏற்றுக்கொண்டு பயணிக்கப் போகிறோமா? நாம் எந்தளவு பற்று மாறாதவர்களாகவும், நீதியுள்ளவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் நடந்து கொண்டோம்.
(1தெ 2:10) என்ற வார்த்தைகளுக்கு இணங்க துரோகத்தால் மற்றவர் மனங்களைத் தன்பப்படுத்தாமல் கிறிஸ்துவின் பாதையில் பயணம் செய்யத் தயாராவோம்.

## காயங்களின்....

( 4ம் பக்கத் தொடர்ச்சி)

தலையில் எண்ணை வைத்து நேர்த்தியான உடை அணிந்த மாணவன் குறுக்கிட்டான். "சேர், இந்தச் சின்னத் துளைக்கூடாக எப்படி வண்ணத்துப்பூச்சி வெளிவரமுடியும்?"

"அதுவா..." என்று ஆசிரியர் சொல்லத் தொடங்க.
வகுப்பறை வாசலுக்கு வந்த அதிபர், ஆசிரியரை அழைக்க அவர் வெளியே சென்று விடுகிறார்.

இந்த நேரத்தில் அந்த வண்ணத்துப்பூச்சி அந்தத் துளை வழியே வெளிவரத் தொடங்கியது. கொஞ்சப் பகுதி வெளிவந்து விட்டது. இறக்கைப் பகுதி வெளிவரவே இல்லை. அந்த வண்ணத்துப்பூச்சி மிகுந்த கஸ்ரப்பட்டு அந்த மண் சுவர்களோடு உராய்ந்து உராய்ந்து போராடிக்கொண்டிருந்தது. அதன் வலியைப் பார்க்க மாணவர்களுக்குப் பாவமாக இருந்தது.

உடனே அவர்கள் அந்த மண்கூட்டை மெதுவாக உடைத்து வண்ணத்துப்பூச்சியை பாதுகாப்பாக வெளியே எடுத்து விட்டார்கள். அது சிறகு இரண்டும் ஒட்டியபடி கிடந்தது. இரண்டு தடவை துடித்தது. இப்போது ஒரு அசைவுமில்லை. இறந்து விட்டது.

அதேநேரம் ஆசிரியர் மீண்டும் வகுப்பறைக்குள் வருகிறார். நடந்ததைச் சொல்கிறார்கள் மாணவர்கள். ஏன் இந்த வண்ணத்துப்பூச்சி பறக்கவே இல்லை. ஏன் இறந்துபோனது என்று கேட்கிறார்கள்.
ஆசிரியர், "இந்தச் சிறிய துளைவழியே அது வருந்தி, உராய்ந்து காயப்பட்டு வெளிவருகிற அந்தப் போராட்டத்தில்தான் அதன் சிறகுகள் வலிமை பெறுகின்றன. அதன் உடல் பலம் பெறுகிறது. இந்தப் போராட்டம் தான் அதை ஒரு வண்ணத்துப்பூச்சியாக முழுமை செய்கிறது".

இந்தக் காயங்கள் நிறைந்த பாதயைக் கடந்து வந்தால்தான் அதற்கு வானங்கள் சொந்தமாகும். ஆயிரம் மலர்களை இரசிக்க முடியும்.

சிலுவைகள் காயங்கள் இல்லாமல் இயேசுவாக முடியாது. காயங்கள் வெறும் காயங்கள் அல்ல. அவை வரங்கள். உழுத நிலம் போல சிலுவையில் தொங்கிக் கிடந்த இயேசு, காயங்கள் தாண்டி மகத்துவமான உயிர்ப்புக்களால் நிறைந்து விடுவார்.

**காயங்களின் வாசம் நாளை உனக்கும் வானங்களை வரமாய்த் தரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலன் கலசம்

# அன்பியத்தில் நாம் அன்னியரா? அயலானா? சகோதரரா?



அருட்பணி. டேவின் (தி.ச)

("அனைவரும் சகோதர- சகோதரிகள்" (fratelli tutti) சமூக சுற்றுமடலின் பார்வையில் அன்பிய வாழ்வில் ஒரு தேடல்.)

**ஆ**ன்மீக வாழ்வு ஒரு தேடலும் பயணமுமாகும். இந்தப் பயணத்தேடல் அர்த்தமுள்ளதாக அமைய நாம் பல வழி களில் உறுதிப்படுத்தப்படுகின்றோம். அன்பியம் ஒரு கருத்தியல் கட்டமைப்பு அல்ல மாறாக 'அன்பு வாழ்வை' பகிர்ந்து கொள்ளத் திருச்சபை ஏற்படுத்தி யுள்ள உயிரும் உடலும் கொண்ட கிறிஸ் தவர்களைக் கொண்ட ஓர் வாழும் குழு அலகு. அன்பு வாழ்வை அடிப்படை இயல்பாகக் கொண்டுள்ள அன்பியத்தை "அனைவரும் சகோதர சகோதரிகள்" என்கின்ற திருதந்தை பிரான்சிஸ் வெளி யிட்டுள்ள சமூக சுற்றுமடலின் பார்வை யில் சிந்திக்க விளைகின்றோம்.
இந்த ஆக்கம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**1."அனைவரும் சகோதர- சகோதரிகள்" எனும் ஆன்மீகம்.**

**2.அன்பியத்தில் ஆன்மீகம்.**

சுற்றுமடல் கூறும் ஆன்மீக வாழ்வு ஐப்பசி 2020 அன்று புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருநாள் அன்று எம் திருதந்தை பிரான்சிஸ் அவர்களால் வெளியிடப்பட்ட "அனைவரும் சகோதர- சகோதரிகள்" சுற்றுமடல் ஓர் கருத்தியல் கொண்ட ஆன்மீக மடல் அல்ல மாறாக அடிப்படை- அவசியமான சமூக ஆன்மீக வாழ்விற்கு அழைப்பு விடுக்கும் உணர்வு பூர்வமான மடல். தற்கால சூழலில் மனித வாழ்வின் யதார்த்தங் களை வெளிப்படுத்தி இறைவார்த்தைகள் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

### நற்செய்தியைச் சுமக்காத ஆன் மீக இறையியல் பயனற்றது.

புனித பிரான்சிஸ் அசிசியாரின் ஆன்மீகப் பார்வையும் ஆன்மீக வாழ்வும் இரண்டு வெவ்வேறான விடயங்கள் அல்ல மாறாக அவை இரண்டும் ஒன்றே. ஆன்மீகப் பார்வையே ஆன்மீக வாழ்வானது. இந்த உலகிலுள்ள அனைத்து மனிதர்களையும் சகோதர சகோதரி களாகப் பார்த்து வாழும் ஆன்மீகம் இன்று எம்மில் உண்டா? இந்த உலக லாவிய ஆன்மீகப் பார்வை கொண்ட வாழ்வு இன்று அவசியம் என்பதைத் திருதந்தையின் மடல் எமக்கு உணர்த்துகின்றது.

### மூடிய உலகை சூழும் "இருண்ட மேகங்கள்"

இன்றைய உலகைப் பல்வேறு தீமைகள் சூழ்ந்துள்ளன. ஜனநாயகம், சுதந்திரம், நீதி என்ற நிலைகள் பொருள் இழந்து காணப்படுவதோடு, சுயநலம், அலட்சியம், இலாபம், கழிவுக் கலாசாரம், வேலையின்மை, இனவாதம், வறுமை, அடிமைத்தனம், கடத்தல், மனித உறுப்புக்களின் வியாபாரம் எனப் பல தீமைகள் 'குற்றங்களைக் கட்டமைக்கும்' இவ்வுலக சூழலை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

### அன்னியர் அயலானாக மாற அழைப்பு

'நல்ல சமாரியன்' உவமையை எடுத்துச் சிந்திக்கும் திருதந்தை துன் புறும் மனிதர்களுக்குத் தெருவோரம் அன்னியர்களாக அறிமுகமகும் நாம், வீழ்ந்தவர்களை சுமக்கும் அயலவர்களாகவும் உடைக்கப்பட்டவர் களை அன்பில் உருவாக்கும் பாலங்க ளாகவும் மாற அழைப்பு விடுக்கின்றார். துன்புறும் மனிதனின் முகத்தில் நான் கிறிஸ்துவை காண்கின்றேனா?.

### சுயத்திற்கு வெளியே "நிறைவு"

பிறருக்காகத் திறக்காத இதயம் துடிப் பதில் பயனில்லை. 'பூரணம்' 'நிறைவு' என்பது சுயத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட தேடல் அல்ல. மாறாக "நான்" என்ற "சுயத்தை" கடந்து "நாம்" எனும் தேடல் கொள்ள வேண்டும். நான் மாத்திரம் சமூகம் ஆகாது. 'நீயும்- நானும்' இணைந்த 'நாம்- தான்' சமூகம் என்றால், மற்றவருக்காகத் திறந்து துடிக்கும் இதயம் நம் அனைவருக்கும் அவசியம். நாம் குழுவாக இருக்கும் போதும் கூட்டத்திலும் குருமடத்திலும் வாழும் போதும் மறக்கப்பட்ட அன்னிய ராக நம் வாழ்வை வாழ்வதும் அல்லது வாழ்வுக்குத் தூண்டப்படுவதும் இக்கால வேதனைகள்.

### வியாபாரங்களையும் அரசியல் இலாபங்களையும் கடந்த அன்பு இதயம்

"அடுத்தவரும் நானும்" எனும் போதே 'அயலான்' என்னும் வார்த்தை தோன்று கின்றது. 'ஒருவர்' மாத்திரம் தனித்து 'அயலானாக' மாறுவது சாத்தியம் அல்ல. இன்று உலகில் அரசியல் இலாபத்திற் காகவும் வியாபார சலுகைக்காகவும் எல்லைகள் மூடப்பட்டு துறக்கப்படுகின்ற னவே ஒளிய மனித அன்பு இதயங் களோடு எல்லைகள் மனிதர்களுக்கு திறக்கப்படுவதில்லை என்பது மனுக் குலத்தில் மனிதனின் வீழ்ச்சி. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்னும் எம் பண்பாட்டு அறிவும் தோன்றுகின்றது.

### ஊழல் அற்ற சிறந்த அரசியல்

அரசியல் அவசியமானது என்பதை நன்கு உணர்ந்துள்ள எம் திருத்தந்தை, இந்த அரசியல் என்பது ஊழல் அற்றுக் காணப்படுகின்ற போதே பயனுள்ள சிறந்த அரசியலாக அமையும் என்பதை உணர்த்துகின்றார். ஆரசியல் என்பது நாட்டுக்கு மட்டுமல்ல திருச்சபைக்கும் சமூகத்திற்கும் குடும் பத்திற்கும் பொருந்தும். ஊழல் அற்ற பணிவாழ்வு அவசியம்.

### இரக்கத்தின் அற்புதமும் எழுச்சியும்

இரக்கம் என்பது இன்றும் அர்த்தமுள்ளது என்பதனையும் அனைத் தையும் மாற்றியமைக் கக் கூடிய வல்லமை கொண்டது என்பதனை யும் நாம் மறக்க கூடாது. இரக்கத்தின் வார்த்தைகளோடு சமூக நற்புறவை வாழ்ந்து- வளர்க்கும் மனிதர்களாகக் கலந்து ரையாட நாம் அழைப்புப் பெற்றுள் ளோம்.

### மறவாத ஆனால் மன்னித்த மனிதர்கள் நாம்

"மறப்போம் மன்னிப் போம்" என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அடிமைத்தனம் என்பது உலக மகா யுத்தங்கள், இன அழிப்பு ஒவ்வொரு நாட்டிலும் இடம் பெற்றுள்ள துன்பகர மான நிகழ்வுகள் மறக்கமுடியாத நிகழ்வுகள் என்றும் மறக்கப்பட வேண்டியவை அல்ல என்பதனையும் திருத்தந்தை எடுத்துக் கூறுகின்றார். இருப்பினும் இந்த நினைவுகள் வன்முறையாகவோ பகைமையாக- வோ அல்ல மன்னிப்பு வழங்கப்பட்டு- பாடங்கள் கற்றுக் கொடுத்த நினைவு- களாக என்றும் இருக்க வேண்டும் என்கிறார். இன்று நாம் இறந்தோரை நினைத்து அஞ்சலி செலுத்துவதைத் தண்டனைக்குரிய குற்றமாக மாறியிருப்பது மனித அவலத்தைக் காட்டுகின்றது.

### நட்புறவின் பணியில் இறை நம்பிக்கையுள்ளோர்

மத வாதங்களும் தேசிய வாதங்களும் இன- மொழி துவேசங்களும் இவ்வுல கில் வன்முறைகளையும் பிரிவினைக ளையும் அழிவுகளையும் ஏற்படுத்துகின் றன. நாம் மற்றவருக்காக எம்மைத் தியாகம் செய்ய அழைக்கப்பட்டுள்ளோமே ஒழிய மற்றவரை அழிக்கவோ கொலை செய்யவோ அல்ல. இறைவனை மறுப் போர் சுயத்தை, பணத்தை, செல்வத்தை கடவுளாக மாற்றுவதனை நாம் காண் கின்றோம். ஆதலால் இறை நம்பிக்கை கொண்டோர் சமாதானத்தை- சகோத ரத்துவத்தை ஏற்படுத்தும் கருவிகளாக வாழ அழைக்கப்படுகின்றோம். இவ்வாறான ஆன்மீக சிந்தனைகளை திருத்தந்தையின் சுற்றுமடலில் இருந்து பெற்றுள்ள நாம் இவற்றை அன்பிய வாழ்வில் இருத்திப் பார்ப்போம்.

### அன்பிய ஆன்மீகம்.

இறைவார்த்தை ஆன்மீகத்தைப் பலமாகவும் பாலமாகவும் கொண்டுள்ள அன்பிய ஆன்மீக வாழ்வானது, பல சவால்களையும் குறைகளையும் எதிர்கொண்டு அவற்றை கடந்து தான் பயணம் செய்ய வேண்டும். இவ்வாறான ஆன்மீகப் பயணம் திருத்தந்தை பிரான்சிஸ் கூறும் இக்கருத்துக்களை உள்வாங்கிச் சரியான உயிரோட்டத்தில் அன்பிய வாழ்வை ஆன்மீகத்தில் உறுதிப்படுத்தும் என நம்புகின்றன.

- அன்பியம் நற்செய்தியை சுமக்க வேண்டும்.
- அன்பிய வாழ்வை சூழும் இருண்ட மேகங்களை அடையாளம் காண்பது அவசியம்.

சுயநலம், பொறாமை, தற்பெருமை, நீதி மறுப்பு இவை அன்பிய வாழ்வை சீர்குலைக்க நம்மைச் சூழ்ந்து வரும் பாவ மேகங்களாகும்.

"அன்பியத்தில் அன்னியர்கள்" இருக்க கூடாது. அன்பிய வாழ்வில் யாரும் அன்னியர்களாக பார்க்கப்பட கூடாது. அவ்வாறான பார்வை இருக்கும் என்றால்இ அது அன்பிய வாழ்வாக அமைய முடியாது. அன்பிய உறுப்பினர்களது கண்டும் காணாது பயணிக்கும் வாழ்வு 'அயலான் வாழ்வு' அல்ல மாறாக அன்னிய வாழ்வே.

(தொடர்ச்சி அடுத்த இதழில்...)


11ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 . 03 . 1937



விண்ணில் 01 . 04 . 2010

AD 29

அமரர்
திருமதி மேரி யோசவின் பாக்கியநாதர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
"உமது இறக்கைகளின் நிழலில் மகிழ்ந்து பாடுகின்றேன்" (தி.பா.63:7)

அன்புடன் நினைவு கூரும் : கணவன் அ. பாக்கியநாதர்
பிள்ளைகள் : றெஜி, றொகான், றதீஸ்குமார்
மருமக்கள் : நிஜிதா, வதனி, தயாளினி
பேரப்பிள்ளைகள் : மரிய றியாங்கி, ஜெறோம், ஆன் ஷிரோனி

"மரியன்ஸ்"
கல்லூரி வீதி
மானிப்பாய்.



முதலாம் வருட நினைவு

பிறஞ்சிப்பிள்ளை
யோசேப்

பிறப்பு
01.04.1936
சில்லாலை

இறப்பு
05.04.2020
நானாட்டான்

AD33




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

(ஜெனி, முல்லைத்தீவு)

**கேள்வி: மனங்களைக் குப்பைகளாக வைத்துக்கொண்டு கோயில் கோயில் என்று செல்வதால் என்ன பயன்?**

**ப:** ஜெனி, உள்ளம் இறைவன் வாழும் இல்லம். ஆகவே, இறைவன் வாழும் உள்ளமாகிய இல்லத்தைக் குப்பையாக வைத்திருந்தால் சிரமதானம் போட்டுத் துப்பரவு செய்வதைத் தவிர வேறு வழியில்லை! கோயிலில் உள்ளத்துக் குப்பைகளை அகற்றவேண்டிய சிரமதானம் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. புனித வாரம், இதற்குத் தகுந்த காலம்! ஆனால், துப்பரவு செய்யவேண்டியது நம் ஒவ்வொருவருடைய விருப்பத்திலும் ஆர்வத்திலும் தங்கியிருக்கின்றது. என்ன ஜெனி, புரிகிறதா?

*(காந்தன், யாழ்ப்பாணம்)*

**கே: என்னுடைய புதிய நிறுவனம் ஒன்றிற்கு பெயர் வைக்க விரும்புகின்றேன். அதற்கு 'குறுஞ்சா' என்று பெயர் வைக்க விரும்பினேன். ஆனால் என் நண்பன் ஒருவன் அதனை விட்டுவிட்டு கொஞ்சம் நவீன பெயராக வைக்கச் சொல்லுகிறான். நான் வைத்த பெயர் எப்படி? அதனை மாற்றவேண்டுமா?**

**ப:** காந்தன், "சேர் உங்க கொம்பனிக்கு என்ன பெயர்?" எனக் கேட்கிறார் ஒருவர். உரிமையாளரோ, 'வாழைப்பழம் தம்பி' என்கிறார். "என்ன சேர்!? வாழைப்பழம் எண்டு வச்சிருக்கிறீங்க!" என்கிறார். அவரோ, "வெளிநாட்டுக்காரன் அப்பிள் எண்டு வச்சிருக்கிறான். அதனை மட்டும் கேள்வி கேட்காமல் அப்படியே ஏற்றுக்கொள்வீங்க. நம்ம நாட்டுப் பழத்தை வச்சாத்தான் உங்களுக்குக் கஸ்ரமாக இருக்கு!" என்றாராம். உண்மைதான்! சிந்திக்கக்கூடியது மட்டுமல்ல நம்முடைய மரமண்டைகள் சிந்தனை செய்யவேண்டிய செய்தியும் கூட!

*(சிந்தி, மன்னார்)*

**கே: எவ்வளவுதான் சொன்னாலும் சாதி, சமயம் பார்ப்பவர்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றார்கள். பலருக்குப் புத்தியில் ஏறுவதாகத் தெரியவில்லையே!?**

**ப:** சிந்தி, சிந்திக்க வேண்டிய ஒரு விவகாரத்தைச் சொல்லி இருக்கின்றீர்கள். மிகவும் வேதனைக்குரிய ஒரு விவகாரம். என்ன செய்வது? இச்சகதியில் அகப்பட்டு நம்மினம் கரைசேர முடியாது தவிக்கின்றது. நிற்க, திருமணத்தில், வழிபாட்டு இடங்களில் இன்னும் வெவ்வேறு முக்கிய இடங்களில், தருணங்களில் இம்மனப்பாங்கு வியாபித்து நிற்கின்றது. இச்சாதியில் மணமகன்/ மணமகள் தேவை என விளம்பரம் செய்யும் நம்முடையதுகள் இந்தச் சாதியில் இரத்தம் தேவை என விளம்பரம் செய்ய நாதியற்று இருக்கிறது என்பதை நினைக்கும்போது நம் தாழ்நிலையை எண்ணிப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

*(ஜீன், யாழ்ப்பாணம்)*

**கே: மற்றவர்கள் எங்கள் வீழ்ச்சியில் மகிழுகின்றபோது பெரும் துன்பமாகவும் ஏமாற்றமாகவும் இருக்கின்றது. இந்நிலையில் இருந்து மீள வழி யென்ன?**

**ப:** ஜீன், மாடு ஒன்று கிணற்றில் தவறுதலாக விழுந்துவிட்டது. அம்மாட்டை வெளியே எடுப்பதற்குப் பல முயற்சிகளை ஓரிரு நாட்களாக மேற்கொண்டார்கள். ஆனால், அவை பயனற்றுப் போயின. எனவே அவர்கள் கிணற்றுக்குள் மண்போட்டு அம்மாட்டினை மூடிவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அப்படியே மண்ணைப் போட ஆரம்பித்தார்கள். அம்மாடு எவ்வித பதற்றமுமின்றி எப்படியும் மேலே வந்துவிடலாம் என்ற உறுதியுடன் இருந்தது. அவர்கள் மண்ணை அம்மாட்டின் மீது போடப் போட அம்மாடு உடலை உதறி உதறி மண்ணைத் தன் காலுக்குக் கீழே சேர்த்துச் சேர்த்து இறுதியில் அது தானாக வெளியே வந்தது. மற்றவர்கள் நம்மை ஒரு முடிவுக்குக் கொண்டுவர ஏளனமாகமோ, பழிசுமத்தலாகவோ, சதியாகவோ, சூழ்ச்சியாகவோ, சேறுபூசுதலாகவோ எனப் பல வேடங்களில் வேடர்களாக வருவார்கள். நாம்தான் அத்தகைய களங்களை எல்லாம் தளங்களாக மாற்றி அம்மாட்டினைப் போல அந்நிலைகளில் இருந்து முன்னேறி வெளியே வரவேண்டும்.

*(சிந்து, யாழ்ப்பாணம்)*

**கே: உங்களது பதில்களைப் படிக்கின்ற போது சிலவேளைகளில் சிரித்துச் சிரித்துப் பாதி உயிர் போய்விடும்போல் இருக்கின்றது. அவ்வளவு சுப்பராப் போகிறது.**

**ப:** அப்படியா சிந்து. மீதி உயிர் கவனம்! ஒரு மருமகள் மாமியாருக்குச் சொன்ன ஆலோசனையை உங்களுக்கும் தருகின்றேன். வாசித்துவிட்டுச் செய்ய விருப்பமென்றால் செய்து பாருங்கள். தான் சுவைத்த ஒரு சினிமாப் படத்தினைச் சொல்லி மாமியார் தன் மருமகளிடம், "நேற்று அந்தப் படத்தப் பாத்து, சிரிசிரியெண்டு சிரிச்சு, பாதி உயிர் போயிற்றுதடி!" என்கின்றாள். மருமகளோ, 'அப்படியா மாமி! அப்பிடியிண்டா, அந்தப் படத்தை இண்டைக்கும் கண்டிப்பாப் போய்ப் பாருங்க மாமி" என்றாளாம். ஏன் இந்த ஆலோசனை தெரியுமா? மிஞ்சிய மாமியின் மீதி உயிரைப் போக்குவதற்கு! சிந்து, நீங்கள் மருமகளாகி விட்டீர்கள் என்றால் மாமியாருடன் முயற்சித்துப் பாருங்கள். சிரித்துக் கொண்டிருக்கவே உயிர் தானாகப் போய்விடும்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கே: 2019 இல் நடத்தப்பட்ட ஈஸ்ரர் தாக்குதல் குறித்து நீதிவேண்டும் என மீண்டும் மீண்டும் கோரிவரும் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை போரில் கொல்லப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் பற்றியோ அல்லது தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் குறித்தோ இதுவரையில் நீதி நியாயம் கேட்டதாகத் தெரியவில்லை! ஆனால், ஈஸ்ரர் தாக்குதலுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடி வருவதோடு, அது கிடைக்கவில்லை என்றால் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தப்போவதாகக் கூறியிருக்கின்றார் என்று தகவல். ஏன் இத்தகைய ஓரவஞ்சனையைக் காட்டுகின்றார்? கடவுளும் இதனைப் பார்த்துக்கொண்டு தானே இருக்கின்றார்!**

**ப:** ஐயோ அன்ரன், உங்களை எங்கு கண்டு எப்படி என் மனக்கிடக்கையைக் கூறுவதென்று தெரியவில்லை! பலருடைய மனங்ளில் சில நாட்களாக உருண்டு பிரண்டு திரண்டு முரண்டு பட்டுக் கிடந்த எண்ணத்தை அப்படியே எழுதியிருக்கின்றீர்கள்! நீங்களே கேள்வியையும் எழுதி, விடையையும் கூறியுள்ளீர்கள்! இதுக்குப் பிறகு நான் எதனைச் சொல்வது அன்ரன்! வேண்டுமென்றால் நீங்கள் முன்மொழிந்ததை நான் வழிமொழிகின்றேன்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

---

# கொரோனா வீடு



மனோ சின்னத்துரை

எடுத்ததற்கெல்லாம் முகத்தைத் தொங்கப் போட்டால் அவர்களால்தான் என்ன செய்யமுடியும்? எனக்கு இது வழமை. பழகிப்போன விடயம். ஆனால் அவர்களுக்கு! அதுவும் இந்த நிலைமையில்! நச்சரிப்புகளிலிருந்து என்னைக் காப் பாற்றிக் கொள்ளவும், எனது இயலாமையை மௌனமாகக் கடக்கவும் இதை ஓர் உத்தியாகப் பயன்படுத்திக் கொண்டேன். காலைத் தேநீரைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது அம்மா எனக்குப் பின்னால் வந்து அமைதியாக நின்றார். "பிள்ளை, என்ன வேலைக்குப் போகப்போறியா?" அம்மாவின் குரல் உடைந்திருந்தது.

நான் பதில் சொல்லவில்லை. முகத்தை விறைப்பாகவே வைத்துக்கொண்டேன். கடந்த ஒரு வார காலமாக வீடு அமைதியிழந்து காணப்பட்டது. பிரான்சில் பெருமளவிலானோர் வீட்டுக்குள் முடக்கப்பட்டு விட்டனர். எனது கணவரும் வீட்டிற்குள் முடக்கப்பட்டிருக்கும் போது நான் மட்டும் வேலைக்குச் செல்வது அம்மாவுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. அப்பாவுடன் படுத்திருந்த அருண் 'அம்மா' என்று சிணுங்கியபடி ஓடிவந்தான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாங்கள் ஆரம்பத்தில் அம்மாவுடன் மிகவும் கவனமாக இருந்தோம். அம்மா ஒரு நீரிழிவு நோயாளி. அம்மாவுக்கு நோய் தொற்றினால் காப்பாற்றமுடியாது என்று பயந்தோம். அம்மாவின் மடிக்குள்ளேயே தவழ்ந்த அருணுக்கு நிலைமையைப் புரியவைக்கச் சிரமப்பட்டோம். வெளியே போய் வரும் என்னிலிருந்து கொரோனா கிருமி அருண் மூலமாக அம்மாவுக்குக் கடத்தப்படக் கூடிய வாய்ப்புகளை அறிந்திருந்தோம். இப்போது நானும் அருணிலிருந்து விலகியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டேன். வேலை முடிந்து எவ்வளவு களைப்போடு வந்தாலும் அருண் ஓடிவந்து தாவி ஏறி, கட்டி அணைக்கும் போது என் களைப்பெல்லாம் பறந்து விடும். ஒரு துடிதுடிப்பான நாய்க்குட்டியைப் போல தாவி ஏறி தன் எச்சிலால் என்னை வருடும்போது இனம்புரியாத இன்பத்தில் துவழ்வேன்.

இப்போ இரண்டு நாட்களாக அருணுக்கு ஒளித்து வீட்டுக்குள் நுழைகிறேன். அருண், அப்பாவுடன் ஹோலுக்குள் படுக்கிறான். அம்மா தனியறையில். நான் இன்னொரு அறையில். அருண் அம்மாவைத் தேடும்போது தனித்திருந்து துடிக்கிறேன். நித்திரை வர மறுக்கிறது. அவனுடைய அப்பா மிகச் சாமர்த்தியமாக அவனைச் சமாளிக்கிறார்.

என்னைவிடவும் அம்மா மிகவும் துயரப்பட்டார். அருணைவிட்டு விலகியிருப்பது அம்மாவுக்கு மிகப்பெரிய தண்டனையாக இருந்தது.

அருண் கிட்ட வந்தபோது கதிரையைக் குறுக்காக வைத்து அருணை மறைத்துக்கொண்டேன். 'அப்பா ஓடி வாங்கோ..... ஓடி வாங்கோ' என்ற என் பதறல் கேட்டு நித்திரையிலிருந்தவர் துடித்துப்பதைத்து ஓடிவந்து அருணைத் தூக்கினார். அவன் அம்மா..... அம்மா' வென்று கால்களை உதறிக் கத்தினான். அம்மா எனக்குள் ஒளிந்து கொண்டார். அம்மா எனக்குக் கேளாதவாறு விம்முவது எனக்குக் கேட்டது. எனக்கும் அடக்க முடியாமல் இருந்தது. நான் ரொய்லற்றுக்குள் போய் கதவைத் தாளிட் டுக்கொண்டேன். என்னால் முடியு மானவரை அழுது தீர்த்தேன். அப்பா, அருணை வெளியே கொண்டு போயிருந்தார். ஆனாலும் அவன் கத்தி அழுவது எனக்குக் கேட்டது. 'வருவது வரட்டும்' ஓடிப்போய் அருணைத் தூக்க மனது துடித்தது. அடங்கிக் கொண்டேன். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 11 . 02 . 1991



இறைவனின் மடியில் 05 . 03 . 2021

AD 31

அமரர்

### மேரி ஜக்ஷன் அன்ரனிதாஸ்

(பொலிஸ் உத்தியோகத்தர்)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

பொறுமையின் சிகரமாய், பண்பில் நல்லவனாய், உண்மையில் உத்தமனாய், நேர்மையில் கண்ணியமாய், பாசத்தின் நிறை குடமாய், உன் சிந்தனையில் ஆயிரம் எண்ணங்களோடு வளர்ந்த என் அன்பு மகனே! வையகத்தில் வாழலாம் என்று வந்து பாதியில் எங்களை விட்டு சென்றாயோ! உம் அழகு முகமும் புன் சிரிப்பும் எம்மிடம் விட்டுச் சென்றாயோ என் மகனே! ஓயா கண்ணீர் விழிகளுடன் இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் உம் ஆன்மா ஈடேற்றத்துக்காய்.

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
உற்றார், உறவினர் மற்றும்
நண்பர்கள்

திக்கம்
பருத்தித்துறை

## கொரோனா...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு நாட்களாக எனக்குச் சுவை தெரியாதது போல ஓர் உணர்வு இருந்தது. ஆனா லும் பயத்தில் நான் சுவைத்தேன். மெல்லிய இருமல்களையும் கஸ்ரப்பட்டு அமுக்கினேன். காய்ச்சல் போல இருக்க ஒருவருக்கும் தெரியாமல் பரசித்தமோலைப்போட்டுக்கொண்டேன். நான் பணிபுரியும் வைத்தியசாலை என்னை வெருட்டிக் கொண்டே இருந்தது. வைத்தியசாலைப் பணியாளர்களுக்கும் நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டு சிலர் தனிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

நான் ஒரு துப்புரவுப் பணியாளர். என்னை வேலையிலிருந்து நிற்கும் படி எனது கணவரும் வற்புறுத்தியபடி இருந்தார். ஆனால் எங்களது பொருளாதார நிலைமை எனக்குத்தெரியும். நான் அவருக்குத் தைரியம் சொன்னேன்.

உண்மையில் எனக்கு வேலைக்குப் போக விருப்பமில்லை. எல்லோரையும் போல நானும் பயந்தேன். இரவு எட்டு மணிக்கு பிரெஞ்சு மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வது உங்களுக்கும் சேர்த்துத்தான் என்று எனது மேலதிகாரி என்னை உற்சாகப்படுத்தினார். நான் கூனிக்குறுகினேன். நீங்கள் விரும்பினால் மட்டும்வேலைக்கு வரலாம் என்றால் நான் மட்டுமல்ல எமது வைத்தியசாலையில் பணிபுரியும் பலரும்வீட்டுக்குள்ளேயே முடங்கியிருப்பர். பயம் எல்லோரையும் தின்றது. அதேவேளை பிரெஞ்சு அரசின் வேண்டுகோளை ஏற்று பேரிடர் பணிக்குத் தாமாகவே முன்வந்தவர்களை எண்ணியபோது இதயம் அவர்களுக்காக வணங்கியது. கண்களைத் துடைத்துவிட்டு வெளியே வந்தேன். அம்மாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "பிள்ளை நீ வேலைக்குப் போக வேணுமா?" கெஞ்சும் தொனியில் கேட்டார். "அம்மா மரக்கறியள் இருக்கா?" என்று நான் கதையைத் திசை திருப்பினேன். "அம்மா வேணுமெண்டா தமிழ்க் கடையளுக்கு ஓடர் பண்ணினா கொணந்து தருவினம். இவரிட்டச் சொல்லுங்கோ. ஒரு நாள் முழுக்க வெளியில வைச்சிட்டு, பிறகு எடுத்துப் பாவிக்கலாம்" அம்மாவின் முகம் பார்க்காமலே பேசிக்கொண்டிருந்தேன். இடையிடையே வந்த இருமலை விழுங்கிக்கொண்டேன். உண்மையில் காய்ச்சலாகவே இருந்தது.

கொரோனா தொற்றிவிட்டதா என்பதைப் பரீட்சித்துப் பார்க்கும் வசதி எமது வைத்தியசாலையில் இருந்தது. ஆனாலும், நான் அதைத் தவிர்த்துக்கொண்டேன். எனக்கு கொரோனா தொற்றியிருப்பதை அதன் குணங்குறிகளால் என்னால் உறுதிப்படுத்த முடிந்தது. "பிள்ளை வேலைக்குப் போகப்போறியா?" தாய்ப்பாசம் தவித்துத் துடித்தது. எனக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. நான் மதிய உணவினை பார்சல் பண்ணிக்கொண்டிருந்தேன்.

*நன்றி :-கொரோனா வீட்டுக் கதைகள்*

## 31ம் நாள் நினைவலைகள்

மலர்வு 22 . 04 . 1943



உதிர்வு 28 . 02 . 2021

AD 34

அமரர்

### இராயப்பு அமிர்தநாயகம்

அப்பா
எங்கள் ஆருயிரே
உம் பிரிவால் கதிகலங்கி நிற்கின்றோம்
வாழ்வு என்னும் ஓட்டத்தில்
பல தடங்களைப் பதித்தவரே
உம் புன்சிரிப்பும் அன்பான அரவணைப்பும்
எப்போ நாம் காண்போம்
மண்ணில் நாம் உள்ளவரை
உம்மையே நினைத்து கலங்கும் உம் உள்ளங்கள்

*பிரிவால் வாடும்*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்*

## நெஞ்சகலா 25ம் ஆண்டு நினைவு கூரல்

பிறப்பு 23 . 12 . 1918



இறப்பு 11 . 04 . 1996

AD 32

அமரர்

### இராயப்பு இம்மானுவேல் (இராசா)

(மண்டைதீவு)

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. (லூக் .1:46)

ஐ ஐந்து ஆண்டுகள் கழிந்தாலும் உங்கள் வாயினின்று வந்த இவ் இறுதி இறைவார்த்தை எம் செவிகளில் இப்போதும் கேட்கின்றது.

சிறுவயதில் அன்னையை இழந்த எமக்கு நீங்கள் காட்டிய பாசம். இறை சித்தத்தை ஏற்று வாழ்ந்த வாழ்வு. பிறரன்புப் பணிகள் எம் வாழ்வுக்கு கற்றுத்தந்த பாடங்களே.

தங்களை தந்தையாக தந்த
எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி

என்றும் உங்கள் நினைவுகளுடன்

அன்புப் பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

3ம் வட்டாரம்
மண்டைதீவு

## சிலுவையில் ஊடாடும்...

(05ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கொள்கைக்காகத் தன்னை வதைக்கும் செயல் மனித குலத்துக்கு ஆழமான செய்தியைக் கொடுக்கிறது. பல அடிமைத்தன விடுதலைக்கு உயிர்ப்பு மூலவிசையாக அமைகிறது. பவுல் அடிகளாரின் வார்த்தைகள்:

இறைமகனாயிருந்தும் துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்." (எபி:7,8) இறைவாக்கினர் இசையாவு டைய வார்த்தை கனதியானது. " நீதிமான்களுடைய வாழ்வு உலகத்துக்கு மீட்பின் கருவியாக மாறக்கூடிய பொருள் கொண்டது.." புனித ஆயர் றொமைறோ, புனித மக்ஸ்மிலியன் கொல்பே, மண்டேலா, காந்தி போன்றவர்களுடைய துன்பியல் மக்களின் விடுதலைக் கருவியாக மாறியது. எனவே இரக்கம் மன்னித்தல் அக்கறை போன்ற பண்புகள் ஒப்புரவையும் குணமாக்கலையும் விடுதலையையும் கொண்டுவரக்ககூடியது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் கரங்களில் 21 . 04 . 1949



இறைவனின் கரங்களில் 20 . 03 . 2020

எங்கள் அன்புத் தந்தை

### அமரர் அந்திரேஸ் மருசலீன்

வரமாய் வந்த எம் வாழ்வுக்கு
முகவரி தந்த எம் அன்புத் தந்தையே!
கண்ணின் கண்ணாய் எமை வளர்த்த தந்தையே!
எம் கண்ணில் நீர் சொரிய
எமைவிட்டுப் பிரிந்ததேனோ.......
துணை என இருந்த நீங்கள்
தவியாய் நாம் தவிக்க
எமைவிட்டு சென்றதேனோ.......
உம்மை வாட்டிய கொடிய நோய் கண்டு
துடியாய் துடித்தோம் தந்தையே!
உம்மைத் தேற்றிடுவோம் என்று
இறுதி வரை போராடினோம் தந்தையே!
முடியவில்லை குணமாக்க எம்மால்

நாம் தேடும் உறவே
உம்மைத் தேடிய விழிகளும் வாடுதே
உம்பிரிவு இறை திருவுளம் என்றானது தந்தையே!
உன்னத மனிதர்களின் கரங்களில்
உமது இறுதி ஊர்வலம் இருந்தது
வரம் என்று நினைத்தோம் தந்தையே!
உம் ஆன்மா இறைவன் திருப்பாதம்
இளைப்பாற்றியடைந்திட வேண்டுகின்றோம்.

"எம்மவர்க்காய் இறைவனிடம் பரிந்துரைத்திடுவீர்"

கடந்த வருடம் தந்தையின் இழப்பின் துயரில், எம்மோடு கலந்து கொண்டவர்களுக்கு எமது நன்றிகள். சிறப்பாக கொரோனா தொற்றின் அச்சத்திலும் வைத்தியசாலையில் ஆறுதல் கூறியவர்கள், உதவி புரிந்த வைத்தியசால்லை சமூகத்தினர், இறப்பின் போது உடனிருந்து எம்மை தாங்கிய ஆயர், குருக்கள், துறவிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள், பாசமிகு உறவினர்கள், நண்பர்கள் உங்கள் அனைவருக்கும் எம் உளம் நிறைந்த நன்றிகள்.

அழியா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

**புலோப்பளை மேற்கு**
**[illegible]** AD 35

## விண்ணக வாழ்வின் 7ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 06 . 02 . 1928



விண்ணில் 28 . 03 . 2014

அமரர்

### திருமதி அந்தோனிப்பர்னாந்து செலீனம்மா

"ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"
(தி.பா. 27:4.)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வில் வழிகாட்டியாய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு அம்மாவே நீர்
இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

5ம் வட்டாரம்
மண்டை தீவு

AD 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் தீமைகள் என்று நினைப்பவற்றையெல்லாம் நான் வெற்றி கொண்டுவிட்டேன் – குருமுதல்வர்



கிறிஸ்துவில் அன்பார்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் இயேசுவின் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இன்று நாம் வாழும் உலகில் எமைச் சுற்றி நடக்கின்ற நிகழ்வுகளையும், எமது வாழ்வைப் பாதிக்கின்ற சம்பவங்களையும் நோக்கும்போது, நாம் வாழுகின்ற உலகு தீமையானது, பயங்கரமானது, ஆபத்தானது, இருட்டானது, பாதுகாப்பற்றது அல்லது கொடூரமானது என்ற ஒரு முடிவின் விழிம்புக்கு எம்மை அழைத்துச் செல்லுகின்றபோது, அங்கு உயிர்த்த இயேசு மாட்சிமையோடு எம்முன் தோன்றித் தனது காயங்களைக் காட்டி, எம்மைப் பார்த்து, நீங்கள் தீமையென்றும், பயங்கரமென்றும், ஆபத்தென்றும், இருட்டென்றும், பாதுகாப்பற்றதென்றும், கொடூரமானதென்றும் நினைக் கின்ற இந்த உலகத்துக்காகத்தான் நான் பாடுகள் பட்டு, சிலுவையில் தொங்கி, மரித்து, உயிர்த்தெழுந்து இவற்றையெல்லாம் வெற்றி கொண்டுவிட்டேன்.

எனவே, அஞ்சாதீர்கள்! நீங்கள் வாழுகின்ற உலகில் நான் உயிரோடு பிரசன்னமாயிருக்கிறேன். நானே ஒளி, நானே அமைதி, நானே வாழ்வு என்று உயிர்த்த ஆண்டவர் எம்மை நோக்கிக் கூறுகிறார்.

# களங்கம்



யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தினால் ஆற்றுகை செய்யப்பட்ட "களங்கம்" திருப்பாடுகளின் நாடகம் இம்முறை நாட்டில் நிலவும் பெரும் தொற்றுக்காரணமாக தொலைக்காட்சி, இணையத்தள தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்களுடாக மிகவும் சிறப்பான முறையில் பக்தி பூர்வமாகக் காட்சிப்படுத்தப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட கலைஞர்களைக்கொண்டு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. ஜோன்சன் ராஜ்குமார் அவர்களின் சிறந்த நெறியாள்கையுடன் மேடையேற்றப்பட்ட இத்தவக்கால ஆற்றுகை பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.



கடந்த 21.03.2021 அன்று பரந்தன் பங்கில் அன்பியம் தொடர்பான கருத்தமர்வு பங்குத்தந்தை அருட்பணி R.H. சகாயநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தமர்வை யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A. மில்பர்வாஸ் CMF அடிகளுடன் இணைந்து மறைமாவட்ட அன்பிய வளவாளர் திரு. இ. அ. அமலரட்ணம் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர்.




கடந்த 11.03.2021 அன்று கிளரேசியன் விவிலியப் பணியகம் நடத்திய அஞ்சல் வழி விவிலியக் கல்வி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுண்டிக்குளியில் அமைந்துள்ள கிளாரட் அகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கிக் கெளரவித்தார்.

# குருத்துவத் திருநிலைப்படுத்தல்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள் எதிர்வரும் 24ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். திருத்தொண்டர்களாகிய **கு. தயதீபன், ஜே. நிலான் யூலியஸ் , ச. யூட் கெமில்டன்** ஆகியோரே யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக் குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர்**
**கு. தயதீபன்**

அவர்கள் அளம்பில் பங்கின் புனித அந்தோனியார் ஆலயத் திரு அவையைச் சேர்ந்தவர். திரு. திருமதி குமாரசிங்கம் மரியராணி தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்பக்கல்வியை அளம்பில் மகா வித்தியாலத்திலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை முல்லைத்தீவு மகாவித்தியாலத்திலும் மற்றும் வவுனியா பெரிய கோமரசன் குளம் மகாவித்தியாலத்திலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக் கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர்**
**ஜே. நிலான் யூலியஸ்**

அவர்கள் இளவாலை புனித யாகப்பர் ஆலய திரு அவையைச் சேர்ந்த திரு. திருமதி அந்தோனி ஜேம்ஸ் மேரி எட்விஸ் றூபி தம்பதியரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக் கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல், இறையியல், கற்கை நெறிகளைக் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியிலுத் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர்**
**ச. யூட் கெமில்டன்**

அவர்கள் சக்கோட்டை பங்கின் புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத் திரு அவையைச் சேர்ந்தவர். திரு. திருமதி சத்தியசீலன் பிறிசிலாராணி தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்பக் கல்வியை மு/இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலத்திலும் மற்றும் இடைநிலைக் கல்வியை யா / அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை யாழ்/ பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக் கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மற்றும் கண்டி தேசிய குருமடத்திலும் இறையியலை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

புதிய குருக்களை பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்

# அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு



முல்லைதீவு மறைக்கோட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு புதுக்குடியிருப்புப் பங்கில் 13. 03. 2021 அன்று மறைகோட்ட முதல்வர் அருட்பணி A.P. அன்ரனிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருட்பணி ஆ. ஷோபன் ரூபஸ், அருட்பணி ஆ. நிக்சன் கொலின், அருட்பணி அலெக்ஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.



கடந்த 20.03.2021 அன்று யாழ். மறைமாவட்ட நற்கருணைப் பணியாளர்களுக்கான தியானமும் ஒன்று கூடலும் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்பணி. யோ.யோ. மவுலிஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்பணி M. றெக்ஸ் சவுந்தரா அடிகள் தியான உரையை வழங்கியிருந்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல [illegible] அச்சகத்தில் 2021ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org